Registered as a NewsPaper

விலை ரூபா 7.00

# ஈழநாதம்

EELANATHAM

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-08

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | ஆடி -18 | 03-08-2003 | ஞாயிற்றுக்கிழமை | ஓசை 166

கிளிநொச்சியில்
கணினி மையம்
TCC
கணினி விற்பனையாளரும் திருத்த சேவையாளரும்
யாழ். சாலை, கிளிநொச்சி.

# தேசியத் தலைவருடைய எண்ணங்கள் தென்தமிழீழத்தில் செயலுருப் பெற்றிருப்பதைப் பார்த்து மகிழ்கிறோம்

## மூதூரில் இலவச கணினிப் பயிற்சி நிலையத்தை திறந்து வைத்து சு.ப.தமிழ்ச்செல்வன் உரை

(திருமலை)

**எமது தலைவருடைய திட்டங்கள், எண்ணங்கள், அவருடைய வழிகாட்டல்கள் தென் தமிழீழத்தில் செயலுருப் பெற்றுத் திகழ்வதைப் பார்க்கும் போது பெருமகிழ்ச்சியாக இருக்கின்றது என அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் தெரிவித்தார். நேற்று மூதூர் சேனையூரில் இலவசக் கணினிப் பயிற்சி நிலையமொன்றைத் திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.**

அவர் அங்கு உரையாற்றும் போது மேலும் தெரிவிக்கையில்; தென் தமிழீழத்தில் நடந்த கொடுமைகளையும், அவலங்களையும் எமது போராளிகள் ஊடாகவும், வாழ்ந்து இடம்பெயர்ந்த மக்கள் ஊடாகவும் நிறையக் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால் நேரடியாக வந்து இந்த மக்களுடைய உண்மையான நிலைப்பாடுகளைப் பார்க்கும் போது எங்கள் மனம் வெதும்புகிறது. உண்மையிலேயே தென் தமிழீழத்திற்குச் சென்று சில வேலைத் திட்டங்களை மேற்கொண்டு வருமாறு எமது தலைவர் என்னைப் பணித்த பொழுது எனக்குப் பெரிய மகிழ்ச்சி. ஏனெனில் நீண்டகாலமாகத் தென்தமிழீழப் பிரதேசத்தையும், எங்களுடைய

(08ம் பக்கம் பார்க்க)

## -திருமலை சேனையூரில்-
# அரச, மாகாண சபை அதிகாரிகளுடன் அரசியல் துறைப் பொறுப்பாளர் சந்திப்பு

அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் திருகோணமலையிலுள்ள அரச அதிகாரிகள், மாகாணசபை அதிகாரி களை நேற்றுச் சந்தித்துள்ளார்.இதில் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழ்ச் செல்வன் உரையாற்றியுள்ளார்.

சேனையூர் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திருமலை மாவட்ட கட்டளைத் தளபதி பதுமன் மற்றும் திருமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர்திலக் ஆகியோரும் உரையாற்றினர். இக்கூட்டத்தில் 200க்கும் அதிகமான அரச அதிகாரிகள் மற்றும் மாகாணசபை அதிகாரிகள் பங்குபற்றியுள்ளனர். மாகாண சபை அதிகாரிகளில் மாகாணசபையின் பிரதம செயலாளர் ரங்கராஜா மாகாண ஆளுநரின் செயலாளர் அமிர்தலிங்கம் மற்றும் மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், திருமலை நகரசபையின் செயலாளர், விசேட ஆணையாளர் உட்பட பல அதிகாரிகள் பங்குபற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (25)

## மீசாலையில் விபத்து மூவர் படுகாயம்

உந்துருளியில் சென்று கொண்டிருந்த இருவர் துவிச்சக்கர வண்டியில் சென்று கொண்டிருந்த வயோதிபர் ஒருவருடன் மோதி விபத்துக்குள்ளாகியதில் மூவர் காயமடைந்துள்ளார்கள் இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, கண்டிவீதி மீசாலைப்பகுதியில் உந்துருளியை ஓட்டிவந்த இருவர் துவிச்சக்கர வண்டியில் சென்று கொண்டிருந்த ப.நாகரத்தினம் (வயது-50 சங்கத்தானை சாவகச்சேரி) என்பவருடன் மோதி விபத்துக்குள்ளாகினர். இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் வந்துகொண்டிருந்த

(08ம் பக்கம் பார்க்க)

## விபத்தில் காயம்

(ஒட்டுசுட்டான்)

கிளிநொச்சி நகரப் பகுதியில் நேற்றுமாலை 4.45 மணியளவில் உந்துருளி ஈருருளியுடன் மோதி விபத்துக்குள்ளாகி ஈருருளி சேதமடைந்துள்ளது. ஈருருளியில் வந்தவர் வலது பக்கம் திரும்புகையில் பின்னால் வந்த உந்துருளி மோதியதால் ஈருருளியில் வந்தவர் காயத்துக்குள்ளானார். காத்த முத்து கணபதி (வயது 25) என்பவரே காயமடைந்தவராவார். (05)

## ஜப்பானியத் துணை அமைச்சர் இன்று யாழ்ப்பாணம் வருகிறார்

ஜப்பானிய வெளிவிவகாரத் துறையின் சிரேஷ்ட துணை அமைச்சர் நிக்கிரோ ஜய்னோ இன்று யாழ்ப்பாணம் வருகிறார்.

இன்று காலை கொழும்பு வரும் இவர் உடனடியாகவே யாழ்ப்பாணத்துக்கு வரவுள்ளார். இவர் யாழ்ப்பாணத்தில் இணுவில்,கொழும்புத்துறை ஆகிய பகுதிகளிலுள்ள நலன்புரி நிலையங்களுக்கு நேரடியாகச் செல்லவுள்ளார். அங்கு வாழும் மக்களின் சமாதானம் தொடர்பான கருத்துகளையும், அரசியல், பொருளாதார சமூகவாழ்வு தொடர்பாக அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாகவும் கேட்டறியவுள்ளார். அத்துடன மதியம் 11 மணியளவில் கொழும்புத்துறையில் அமைந்துள்ள துரையப்பா மகாவித்தியாலயத்தில் யாழ் மாவட்ட அரசியல்மற்றும் மீள்குடியேற்றம் தொடர்பாகவும் பாதுகாப்பு வலயங்களால் மக்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும் சிறப்புரை ஒன்றையும் ஆற்றவுள்ளார்.

## நல்லூர்க் கந்தன் உற்சவம் இன்று சிறப்பாக ஆரம்பம்

நல்லூர்க் கந்தசுவாமி கோவில் வருடாந்த மகோற்சவம் இன்று ஆரம்பமாகின்றது. இன்று காலை 10.30 மணிக்கு கொடியேற்றம் இடம் பெறும் அதனைத் தொடர்ந்து 25 தினங்கள் மகோற்சவம் நடைபெறும்.

மகோற்சவத்திற்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. இம்முறை மகோற்சவ காலத்தில் இலங்கை முழுவதிலும் இருந்தும், வெளிநாடுகளில் இருந்தும் பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் ஆலயத்தில் கூடுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

## தமிழ்ச்செல்வனுக்கு உலங்கு வானூர்தி
# பொ.ஐ.மு.வின் கருத்துக்களுக்கு தமிழர் கூட்டணி கண்டனம்

அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் பயணம் செய்ய அரசு உலங்குவானூர்தி வழங்கியதாக பொ.ஐ.மு தெரிவிக்கும் கண்டனம் சமாதான முயற்சியைக் குழப்புகின்ற செயற்பாடென தமிழர் விடுதலைக் கூட்டணியினர் குற்றம் சாட்டியுள்ளனர். போர் நடைபெற்ற காலத்தில் அரசு ஒரு நாளைக்கு எட்டுக்கோடி ரூபாவை செலவிட்டதெனவும் தற்போது அத்தொகை 50 சதவீதமாக குறைந்துள்ளதெனவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

(08ம் பக்கம் பார்க்க)

## குறிகட்டுவான் இறங்குதுறைக்குச் சமீபமாக
# சிங்களப் பயணிகள் வந்த படகொன்று கவிழ்ந்தது

(யாழ்ப்பாணம்)

நயினாதீவுப் பகுதியிலிருந்து குறிகட்டுவான் இறங்குதுறையை நோக்கி வந்து கொண்டிருந்த பயணிகள் படகொன்று கவிழ்ந்துள்ளது.

நயினாதீவுக்குச் சென்ற 75 வரையான பயணிகளை ஏற்றிக் கொண்டு குறிகட்டுவான் இறங்குதுறையை நோக்கி வந்து கொண்டிருந்த "நாக தீப"என்ற பயணிகள் படகே இவ்வாறு கவிழ்ந்துள்ளது.

(08ம் பக்கம் பார்க்க)

## தமிழீழக் காவல்துறைஅணி வன்னியிலிருந்து மட்டு.சென்றது

மட்டக்களப்பில் தமிழீழக் காவல்துறையினரின் பணிகளை மேலும் விஸ்தரிக்கும் நோக்குடன் 24 உறுப்பினர்களைக் கொண்ட தமிழீழக் காவல்துறையினரின் அணி ஒன்று நேற்று வன்னியிலிருந்து மட்டக்களப்பைச் சென்றடைந்துள்ளது.நேற்றுக் காலை ஏ-9 நெடுஞ்சாலை ஊடாக ஓமந்தை சோதனைச் சாவடியைச் சென்றடைந்து, பின்பு அங்கிருந்து போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரின் அனுசரணையுடன் சிறிலங்காப் படையினரின் வழித்துணையுடன் அந்த அணியினர் மட்டக்களப்பைச் சென்றடைந்துள்ளனர். மட்டக்களப்பில் தமது பணிகளை விரிவாக்கும் வகையில் மட்டக்களப்புக் காவ

(08ம் பக்கம் பார்க்க)

## ஜப்பானிய அ.சா.நி.பிரதிநிதிகள் வன்னிக்கு நாளை விஜயம்

ஜப்பானிய அரச'சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் வன்னிக்கு விஜயம் செய்யவுள்ளதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. நாளை முதல் ஆறாம் திகதி வரை வன்னியில் தங்கியிருக்கும் இவர்கள் அரசியல்துறை உறுப்பினர்கள், மற்றும் தமிழர் புனர்வாழ்வுக் கழக உறுப்பினர்கள் ஆகியோரைச் சந்திக்கவுள்ளனர். அத்துடன் கிளிநொச்சி, முல்லைத்தீவில் இயங்குகின்ற அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளையும் சந்திக்கவுள்ளனர். போரினால் இடம்பெயர்ந்து சொந்த இடங்களுக்குத் திரும்பியவர்களின் தற்போதைய நிலைமை குறித்தும் பார்வையிடவுள்ளனர்.

# யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளரிடம் தமது குறைகள் குறித்து கடற்றொழிலாளர் முறையீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்குடா நாட்டுக் கடற் றொழிலாளர்கள் தங்களது பிரச்சினைகள் தொடர்பாக யாழ் மாவட்ட அரச அதிபரை மாதமொருமுறை சந்தித்துக் கலந்துரையாடுவதற்கு யாழ் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி ஏற்பாடு செய்வதென உறுதியளித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ் மாவட்ட அரசியல் துறையினரை யாழ்ப்பாணத்தில் பல பகுதிகளிலுமுள்ள மீனவர்களின் பிரதிநிதிகள் சந்தித்துத் தங்களது பிரச்சினைகள் தொடர்பாகக் கலந்துரை யாடினார்கள். இக் கலந்துரையாடலில் தினமும் சிறிலங்காப் படையினரால் பாஸ் நடைமுறைகள், சோதனைக் கெடுபிடிகள் எனப் பல துன்பங்களை அனுபவித்து வருவதுடன் கடற்படையினரின் தாக்குதல்கள் பொருட்சேதங்கள் என்பவற்றிற்கு இலக்காகி வருவதனால் தமது தொழில தடைப்படுவதுடன், தமது உரிமைகளும் பறிக்கப்படுகின்றன எனவும இந்திய ரோலர்களின் அடாவடித்தனங்களும், தம்மீதான அத்துமீறல்களும் அதிகரித்து வருகின்றன. இந்த நிலைமை தொடருமானால் தாம் பட்டினிச்சாவை எதிர்நோக்க வேண்டியேவரும் எனவும் இதனைச் சுட்டிக்காட்டி போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு உட்பட பல அரச, அரசசார்பற்ற அமைப்புகளுக்கு பல மகஜர்கள் அனுப்பியும் இதுவரையும் எதுவித சாதகமான பதிலும் கிடைக்கவில்லை எனவும் இவ் யாழ்மாவட்டக் கடற்றொழிலாளர் பிரதிநிதிகள்

(08ம் பக்கம் பார்க்க)

## இனந்தெரியாதோரின் தாக்குதலில் யாழ்.இல் பொலிசார் ஒருவர் காயம்

நேற்று மாலை யாழ்ப்பாண நகர்ப் பகுதியில் இனம் தெரியாதோரால் சிறிலங்காப் பொலிசார் ஒருவர் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளார்.இச்சம்பவத்தில் காயமடைந்த பொலிசார் பியர் போத்தலால் தாக்கப்பட்டதால் மிகவும் கடுமையாகக் காயப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் 24 ஆம் இலக்க விடுதியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். புத்தளத்தைச் சேர்ந்த எஸ்.கேமசந்திரா (வயது50) என்பவரே காயமடைந்தவராவார்.

## வரி விளம்பரம்

**N.E.C**

A9-கிளிநொச்சி
Day Class வர்த்தகப் பிரிவு
தனித்துவமிக்க ஆசிரியர்களால்
10-08-2003 ஆரம்பம்
கணக்கீடு G. பரணிதரன் B.Com (Hons) Acc.spi, பொருளியல் T.திவ்வியரூபன், B.Com (Hons), வணிகக்கல்வி S. சத்தியானந்தன் வவுனியா, கொழும்பு பிரபல ஆசிரியர். (3602)


## சமுகம்தரவும்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி வலய கல்வி அலுவலகத்தில் பணிபுரியும் பிரதிக் கல்விப்பணிப்பாளர்கள், உதவிக்கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள் ஆகியோரை நாளை காலை 9.30 மணிக்கு கிளி. வலயக்கல் விப்பணிமனைக்கு தவறாது சமுகமளிக்கும் வண்ணம் கிளி. வலயக் கல்விப்பணிப்பாளர் ப.அரிய ரத்தினம் வேண்டுகை விடுத்துள்ளார். (சோ)

# போர்க்காலப் பொதுச் சேவையில் மக்களின் மதிப்பைப் பெற்றவை கூட்டுறவு நிறுவனங்களே

## தமிழீழ நிர்வாகசேவைத் துணைப்பொறுப்பாளர் இளஞ்சேரன்

(அலுவலக செய்தியாளர்)

போர்க்கால மக்கள் சேவையில் மக்களின் மதிப்பைப் பெற்றவை கூட்டுறவு நிறுவனங்களே எனத் தமிழீழ நிர்வாக சேவைத் துணைப் பொறுப்பாளர் பொ.இளஞ்சேரன் தெரிவித்துள்ளார். கடந்த புதன்கிழமை கிளி.மாவட்டத்தில் நடைபெற்ற 81 ஆவது சர்வதேசக் கூட்டுறவுத்தின விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் மிக அருகிய வளங்களைக் கொண்ட கூட்டுறவு நிறுவனங்கள் காலத்தின் தேவைகருதி மக்களின் துயர்துடைக்கும் பணிகளைச் செய்து, மக்கள் இராணுவ நடவடிக்கையால் புலம்பெயர்ந்த வேளைகளில் அவர்களின் பிரயாண வசதிகளைச் செய்து, இருப்பிட ஒழுங்குகளைச் செய்து, அவர்களின் பசிப்பிணி போக்க ப.நோ.கூ.சங்கங்களும், உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களும், அதன் உறுப்பினர்களும், பணியாளர்களும், ஆற்றிய சேவைகள் வரலாற்றுப் பதிவாகியுள்ளன. ஆனால் இந்நிறுவனங்கள் இன்று திறந்த சந்தையில் போட்டி போடுவதுடன், மக்களின் தேவைகளை இனங்கண்டு சேவை நோக்கோடு செயற்படவும் தம்மைத் தயார்ப்படுத்த வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார். கூட்டுறவு நிறுவனங்கள் தொடர்ந்தும் மக்களின் நன்மதிப்பைப் பெற சகல வழிகளிலும் தமது ஒத்துழைப்பும் கிடைக்கும் எனத் தெரிவித்தார்.

மேலதிக அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் உரையாற்றும் போது கூட்டுறவு நிறுவனங்களைப் புனரமைத்து அவற்றைப் புதுப் பொலிவு பெறச் செய்வதற்கு அரச அதிபர் பணிமனை வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துள்ளதாகவும், கூட்டுறவாளர்கள் தளர்ந்து போகாது தொடர்ந்தும் சேவை மனப்பான்மையுடன் செயற்பட வேண்டும், அத்தோடு உலகமயமாக்கல் சிந்தனையுடன் போட்டிப் பொருளாதார சந்தையில் கூட்டுறவு நிறுவனங்களும் தனி இடத்தைப் பெறும் வகையில் தமது ஆளணியினரை நவீன தொழில் நுட்ப முறையில் பயிற்றுவித்து எதிர்கால வளர்ச்சிப் போக்கிற்குத் தளர்வற்ற வல்லுநர்களாக்க வேண்டும், அப்போது தான் கூட்டுறவு தனக்கான நிலையான இருப்பை நிலைநிறுத்தும் எனத் தெரிவித்தார்.

கிளி. மாவட்ட கூட்டுறவுச் சபைத் தலைவர் அ.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் ந.கந்தசாமி மற்றும் கூட்டுறவு சார்ந்த அதிகாரிகளும் கலந்து கொண்டனர். போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களின் உரைகளும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# பாடசாலைப் பரீட்சைகளுக்கான அலுவலர் குழாமிற்கானவிண்ணப்பம்

(வவுனியா செய்தியாளர்)

இலங்கைப் பரீட்சைத்திணைக் களத்தால் நடாத்தப்படும் பாடசாலைப் பரீட்சைகளுக்கான அலுவலர்குழாமை உருவாக்குவதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இலங்கைப் பரீட்சைத்திணைக களத்தின் பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்புக்கிளை மூலம்ஒழுங்கமைப்புச் செய்யப்படுகின்ற தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சை,க.பொ.த. சாதாரண தரப்பரீட்சை, க.பொ.த. உயர்தரப் பரீட்சை ஆகிய பரீட்சைகளுக்காக அலுவலர் குழாமைத் தெரிவு செய்வதற்காகவே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப்பரீட்சை அலுவலர் குழாமிற்கு இலங்கை கல்வி நிர்வாக சேவை அதிகாரிகள், இலங்கை அதிபர் சேவையின் அதிபர்கள், பிரதி அதிபர்கள், இலங்கை ஆசிரிய சேவையின் ஆசிரியர்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.

எதிர்வரும் காலங்களில் இலங்கைப் பரீட்சைத்திணைக்களத்தினால் நடாத்தப்படும் பரீட்சைகளுக்கான இணைப்பு அலுவலர்கள், உதவி இணைப்பு அலுவலர்கள், மேற்பார்வையாளர்கள், உதவிப் பரீட்சை மேற்பார்வையாளர்கள், நோக்குநர்கள் ஆகியோர் இவ் அலுவலர்குழாமில் இருந்தே நியமிக்கப்பட உள்ளதால் தகுதியானவர்கள் தமது பாடசாலை அதிபர்களுடனோ கல்விப் பணிப்பாளருடனோ தொடர்பு கொண்டு விண்ணப்பப்படிவங்களைப் பெற்று பூர்த்திசெய்து, சமர்ப்பிக்குமாறு பரீட்சை ஆணையாளர் நாயகம் டபிள்யு.ஏ. எம். விஜயசிறி கேட்டுள்ளார். (10)

# கிளி .தொழில்நுட்பக் கல்லூரியில் நாளை நேர்முகப் பரீட்சை

(வவுனியா)

கிளிநொச்சி மாவட்ட தொழில் நுட்ப கல்வி நிறுவனத்தின் பதவி வெற்றிடங்களுக்கான நேர்முகப் பரீட்சை நடைபெறவுள்ளது.

தொழில்நுட்பக்கல்வி நிறுவனத்தின் கணக்கு பதியுநர் பதவிக்கான நேர்முகப்பரீட்சை நாளைக் காலை 9.00 மணிக்கும், காவலாளி பதவிக்கான நேர்முகப் பரீட்சை மாலை 2.00 மணிக்கும் நடைபெற உள்ளது.

மேற்படி பதவி வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களை அனுப்பியவர்களை உரிய நேரத்தில் கிளிநொச்சியில் அமைந்துள்ள தொழில்நுட்பக்கல்வி நிறுவன அலுவலகத்தில் நடைபெறும் நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிக்குமாறு முதல்வர் திரு.தி. பிரபாகரன் கேட்டுள்ளார். (10)

# நீர் நிரம்பிய குழியில் வீழ்ந்து குழந்தை பரிதாப மரணம்

(யாழ்ப்பாணம்)

மலசலகூடம் அமைப்ப தற்காக வெட்டப்பட்ட குழியில் தவறி வீழ்ந்து ஒன்றரை வயது ஆண் குழந்தை உயிரிழந்துள்ளது.

உரும்பிராய் தெற்கு, செல்வபுரம் பகுதியில் நேற்று முன்தினம் காலை இடம்பெற்றஇந்தச்சம்பவத்தில் தவராசா பிரதாப் என்ற ஆண் குழந்தையே உயிரிழந்துள்ளது.

கடந்த 31 ஆம் திகதி பெய்த மழையினால் இக்குழியினுள் நீர் தேங்கி இருந்ததாகவும், பெற்றோர் உணவருந்திக் கொண்டிருந்த வேளை குழியருகே சென்ற அக் குழந்தை அதனுள் தவறி வீழ்ந்து விட்டதாகவும்,

அயலவர் இது பற்றிக் கூறியதையடுத்து அவசரமாகக் குழந்தையைத் தூக்கி, வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றதாகவும் கூறப்படுகின்றது.

# ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் மாதர் சங்கங்களின் தேர்வுக்குழு

(ஒட்டுசுட்டான்)

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் மாதர் சங்கங்களின் தெரிவுக்குழு கடந்த 17ஆம் திகதியும் 24ஆம் திகதியும் நடைபெற்றது.

சின்னச் சாளம்பன் கிராமத்திலும் சிவநகர் புதுக்குளம் கிராமத்திலும் கிராமசேவகர் தமிழ்ச்செல்வன் தலைமையிலும், வலதுகரை 03ஆம் கண்டம், கற்சிலைமடு ஆகிய கிராமங்களில் கிராம சேவகர் ஆனந்தராஜா தலைமையிலும் இந்நிகழ்வுகள் இடம்பெற்றன.

இதில் ஒவ்வொரு குழுவிலும் தலைவர்,செயலாளர், பொருளாளர் உட்பட பதினைந்து பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

இந்நிகழ்வில் முல்லை மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், ஒட்டுசுட்டான் பிர்தேச கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் செல்வி விஜயலட்சுமி , பிரதேசப் பொறுப்பாளர் சின்னக்கிளி, ஒட்டுசுட்டான் பிரதேச பெண்கள் மேம்பாட்டுப் பொறுப்பாளர் வான்மதி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (05)

# ஆங்கில வகுப்புக்கள் ஆரம்பம்

முல்லை. மாவட்ட அரசாங்க அதிபரின் ஏற்பாட்டில்இலகு வழியில் பேசக்கூடிய ஆங்கில வகுப்புக்கள் முல்லைத்தீவு மாவட்டத்தில் முல்லைத்தீவு, முள்ளியவளை, துணுக்காய் ஆகிய இடங்களில் நாளை பி.ப2 மணிக்குஆரம்பமாக உள்ளது. முல்லைத்தீவுப் பகுதியில் முல்லைத்தீவு மகாவித்தியாலயத்தில் மேற்படி வகுப்பு ஆரம்பமாக உள்ளதால் இந்த வகுப்பில் கலந்து கொள்ள விரும்புபவர்கள் அன்று பிற்பகல் 2.00 மணிக்கு முல்லை ம.வி.க்கு வருகைதருமாறு முல்லை மாவட்ட அரசாங்க அதிபர் கேட்டுக் கொள்கின்றார். (20)

# மாகாணமட்டப்போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்றார்

கடந்த 21-06-2003 அன்று திருகோணமலையில் இடம்பெற்ற மாகாணமட்டத்திலான கராத்தே சுற்றுப் போட்டி முல்லை மாவட்டம் சார்பாகக் கலந்து கொண்டு 70கிலோ எடை கொண்ட போட்டியில் முல்லைத்தீவு வண்ணாங்குளத்தைச் சேர்ந்த ஜெனி முதலாம் இடத்தைப்பெற்றுக் கொண்டார்.

இவர் தமிழீழ மட்டத்தில் நடைபெற்ற பல கராத்தேப் போட்டியிலும் முதலாம் இடம் பெற்றுக் கொண்டவர் என்பதுடன் சர்வதேச மட்டத்திலான போட்டிக்கும் தெரிவானார் என்பதும் குறிப்பிடத்தக்கது.(20)

# தொழில் நுட்ப விடயங்கள் பற்றிய விளக்கக் கலந்துரையாடல்

கிளிநொச்சியில் 2002 ஆம் ஆண்டில் "நியாப்" திட்டத்தின் மூலம் புனரமைப்புச் செய்யப்பெற்று வரும் இலக்குக் கிராமங்களையும் 2003 ல் புனரமைப்புச் செய்யப்பெற விருக்கும் இலக்குக் கிராமங்களையும் ஒன்றிணைத்து, அக்கிராமங்களில் சமூக உணர்வூட்டாளர்களாகச் சேவை புரிவோருக்கும், இலக்குக் கிராமங்களில் இயங்கும், கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர், செயலாளர்களுக்குமான, தொழில் நுட்ப விளக்கக் கலந்துரையாடல் நேற்று முன்தினம் கிளி. மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழக அனுசரணை யுடன், கிளி. வலயக் கல்விப் பணிமனையில் இடம்பெற்றது.

கிளி. மாவட்ட "நியாப்" திட்ட சமூக உணர்வூட்டல் இணைப்பாளர் இ.ராஜன் தலைமையில் காலை 10.00 மணிக்கு ஆரம்பமாகி, இடம் பெற்ற இக் கலந்துரையாடலில், வீதிகள் புனரமைத்தல் தொடர்பான தொழில் நுட்ப விடயங்களை, வீதி அபிவிருத்தித் திணைக்கள தொழில் நுட்ப உத்தியோகத்தர் சொ.தவராசாவும், குடிநீர்க்கிணறு அமைத்தல், பொது நோக்கு மண்டபம் அமைத்தல், மலசலகூடம் அமைத்தல் தொடர்பாக, உள்ளூராட்சித் திணைக்கள தொழில் நுட்ப உத்தியோகத்தர் நாஜில் அவர்களும் விளக்கமளித்தனர்.

இக்கலந்துரையாடலின் மூலம், சமூக உணர்வூட்டாளர்கள், கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், நியாப் திட்ட உதவியாளர் ஆகியோர் உள்ளிட்ட நூற்றுக்கு மேற்பட்டோர் கலந்து கொண்டு மேலதிக விளக்கங்களைப் பெற்றுக் கொண்டனர்.

## கண்டெடுப்பு

முகமாலையில் இருந்து முல்லைத்தீவிற்கு வந்த பேருந்தில் கடந்த 16-07-2003 அன்று பெண்களுக்கான சிறிய கைப்பை ஒன்று கண்டெடுக்கப்பட்டு முல்லைத்தீவு காவல் பணிமனையில் ஒப்படைக் கப்பட்டுள்ளது. இதில் தே.அ.அ, வடபகுதிக்கு வெளியே செல்வதற்கான நிரந்தர பயண அட்டை காணப்படுகிறது. தே.அடையாள அட்டையில் பரமுடில்லி சிமித்திரா புன்னைநீராவி 12ம் கட்டை விசுவமடு என முகவரியுள்ளது. உரியவர்கள் முல்லைத்தீவு காவல்பணிமனையில் ஆதாரத்துடன் வந்து பெற்றுக் கொள்ளவும். (20)

# முல்லையில் சிறப்புற நடைபெற்ற கடல் விளையாட்டுப் போட்டிகள்

முல்லைத்தீவு புனித இராயப்பர் ஆலய வருடாந்த பெருநாளை முன்னிட்டு இறுதிநாளான நேற்று முன்தினம் நெய்தல் விளையாட்டுக் கழகத்தினரால் பல்வகையான கடல் விளையாட்டுக்கள் நடாத்தப்பட்டன.

ஆரம்ப நிகழ்வாக மங்கல விளக்கினை பங்குத் தந்தைகளான யூட் அமலதாஸ், சந்திரா ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

முதல்நிகழ்வாக 10 மைல் மரதன் இடம்பெற்றது. இதில் முதலாம் இடத்தை குழமுனையைச் சேர்ந்த பொ. தங்கத்துரையும், இரண்டாம் இடத்தை வண்ணாங்குளம் சென்யூட் விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த யே. சகிலனும், மூன்றாம் இடத்தை முள்ளிவாய்க்காலைச் சேர்ந்த செ.நபனும்பெற்றுக்கொண்டனர்.

தொடர்ந்து 2 கடல்மைல் தூரம் கொண்ட நீச்சல் போட்டி இடம் பெற்றது. இதில் முதலாம் இடத்தை, அளம்பிலைச் சேர்ந்த பொ. ஜெசிந்தனும் இரண்டாம் இடத்தை வண்ணாங்குளம் சென்யூட் விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த அ. மனோகரனும், மூன்றாம் இடத்தை மணற்குடியிருப்பைச் சேர்ந்த எ.சுரேஸ் ஆகியோரும் பெற்றுக் கொண்டனர்.

தொடர்ந்து 9.9/15 குதிரை வலு கொண்ட யாகா படகுப்போட்டியை (15 கடல் மைல்) முல்லைத்தீவுக் காவல்பணிமனைப் பொறுப்பாளர் சுந்தரலிங்கன் ஆரம்பித்து வைத்தார். முதலாம் இடத்தை வண்ணாங்குளம் சென்யூட் விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த மு. அன்ரனும், இரண்டாம் இடத்தைவண்ணாங்குளம் சென்யூட் விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த செ. ஜான்சனும் மூன்றாம் இடத்தை சென்யூட் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த ரகுவும் பெற்றுக்கொண்டனர்.

தொடர்ந்து 9.9/15 (கோஸ்பவர்) குதிரைவலு கொண்ட சுசிக்கி இயந்திரம் பொருத்தப்பட்ட படகுப் போட்டியில் முதலாம் இடத்தை சிலாவத்தையைச் சேர்ந்த திவ்வியனும், இரண்டாம் இடத்தை வண்ணாங்குளத்தைச் சேர்ந்த இருதயநாதனும்,மூன்றாம்இடத்தை கள்ளப்பாட்டைச் சேர்ந்த குலமும் பெற்றுக் கொண்டனர்.

சிறப்புரைகளை பங்குத்தந்தை சந்திரா,கடலுணவுப் பொறுப்பாளர் ராஜன் குட்டி ஆகியோர் நிகழ்த்தினார்கள். இறுதியாக வெற்றியீட்டியவீரர்களுக்குபரிசில்கள் வழங்கப்பட்டன. முதல் ஐந்து இடங்களைப் பெற்றுக்கொண்டவர்களுக்கு பரிசில் வழங்கப்பட்டது. இவ்விளையாட்டு நிகழ்வின் தீர்ப்பாளர்களாக விளையாட்டுத்துறை அதிகாரிகள், ராஜன் கடலுணவுப் பொறுப்பாளர், முல்லை நகர புனரமைப்புக் குழுத் தலைவர் மரியராசா, பங்குத்தந்தை சந்திரா, பிறதர் மரியதாஸ் மரியரட்ணம் ஆகியோர் கலந்துகொண்டனர். இறுதியாக நன்றியுரையினை முல்லைநகரப் புனரமைப்பு குழுச் செயலாளர் செல்வி ச.சகீலா நிகழ்த்தினார்.

இந்த நிகழ்வில் போராளிகள், காவல்துறையினர், பெருமளவான மக்கள் கலந்துகொண்டு சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது. (20)

## கண்டெடுப்பு

02.08.2003 அன்றுகிளிநொச்சி பேருந்து நிலையத்தருகில்ஆண்டி இராஜேந்திரன் 7ஆம் யூனிற், இராமநாதபுரம் என்பவரின் தேசிய அடையாள அட்டை ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. (அ.அ.இல. 82054254 V)

## சிரமதானப் பணி

முல்லைத்தீவில் அமைக்கப்படவுள்ள பொது மைதானம் சிரமதானப் பணி மூலம் திருத்தப்படுகிறது. நேற்று சிலாவத்தை, முல்லை தெற்கு ஆகிய இரு கிராம அலுவலர் பிரிவுகளுக்கு உட்பட்ட மக்கள் சிரமதானப் பணியில் ஈடுபட்டதைக் காணக்கூடியதாக இருந்தது. தொடர்ச்சியாக 03 நாட்களும் சில சிரமதானப் பணிகளில் தவர இரு கிராம மக்கள் ஈடுபடுவர் என கிராமசேவகர் செல்வி ச.கமதி தெரிவித்துள்ளார். (20)


## அழகியல் கண்காட்சி

இடம்:- புது /நுண்கலை மண்டபம் -புதுக்குடியிருப்பு
காலம்:- 04-08-2003-திங்கள் - காலை 9.30 மணி

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

(3469)

நுண்கலைக் கல்லூரி.
அழகியல் பிரிவு.

# லைபீரியாவில் அமைதியை நிலைநாட்ட ஐ. நா. அங்கீகாரத்தில் பல்தேசியப் படை!

## - நாளை முதலாவது அணி பிரவேசம்

**லைபீரியாவில் பல்தேசியப் படையினர் எதிர்வரும் திங்கட்கிழமையிலிருந்து செயலாற்ற இருக்கின்றனர். இதற்கு ஐக்கிய நாடுகள் சபை அங்கீகாரம் வழங்கியுள்ளது.**

இது சம்பந்தமான பிரேரணைக்கு 12 நாடுகள் ஆதரவு வழங்கியுள்ளன. எந்தவொரு நாடும் எதிர்த்து வாக்களிக்கவில்லை.

பிரான்ஸ், ஜேர்மனி, மெக்ஸ்சிக்கோ ஆகிய நாடுகள் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை.

ஐ.நா.செயலாளர் கொபி அனான் கருத்து வெளியிடுகையில், பாதுகாப்புச் சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டமையினால் லைபீரிய மக்களைக் காப்பாற்றுவதற்கு பல்தேசியப்படை சேவையாற்றும் என்று கூறியுள்ளார்.

நைஜீரியாவிலிருந்து முதலாவது இராணுவப் படையினர் நாளை திங்கட்கிழமை அங்கு போய் சேரவுள்ளனர்.

அமைதிப்படையினர் மீது யுத்தகால குற்றச் செயல்களை விசாரணை செய்யும் சர்வதேச நீதிமன்றம் உட்பட எந்தவொரு அமைப்பின் விசாரணையில் இருந்தும் விலக்களிக்கப்பட வேண்டும் எனும் ஏற்பாட்டையிட்டு ஓரளவு கருத்து வேறுபாடுகள் எழுந்துள்ளன.

சனாதிபதி ஜோர்ஜ் புஷ் கருத்து வெளியிடுகையில், சர்வதேச நீதிமன்றத்திற்குப் பதிலாக, சம்பந்தப்பட்ட நாடுகளின் நீதிமன்றங்கள் அவர்களது குற்றச் செயல்களை விசாரணை செய்யலாம் என்று தெரிவித்துள்ளார்.

பாதுகாப்புச் சபையில் இந்தத் தீர்மானம் விவாதிக்கப்பட்ட சமயத்திலும் லைபீரியாவில் தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன. புதிதாக நடந்த மோதலில் ஒரு கர்ப்பிணித் தாய் உட்பட 11 பேர் இறந்துள்ளனர்.



லைபீரியாவின் அரச சார்பற்ற நிறுவனங்கள் வழங்கும் உதவிகளைப் பெற வரிசையில் குழந்தையுடன் காவல் நிற்கும் லைபீரியப் பெண்.

## நக்கீரன் கோபாலின் காவல் நீடிப்பு

(சென்னை)

பொடோ சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட நக்கீரன் கோபால் பொடோ சிறப்பு நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் ஆஜர்ப்படுத்தப்பட்டார்.

நக்கீரன் கோபாலின் நீதிமன்றக் காவலை இம்மாதம் 22 ஆம் திகதிவரை நீடிக்க, சிறப்பு நீதிமன்ற நீதிபதி என். ராஜேந்திரன் உத்தரவிட்டுள்ளார்.

# ரஷ்ய இராணுவ மருத்துவமனையொன்றில் தற்கொலைப் படையினர் பாரிய தாக்குதல்!

## 40 பேர் பலி; 150 க்கும் மேலானோர் காயம்

(மொஸ்கோ)

ரஷ்யாவின் தென்பகுதியிலுள்ள இராணுவ மருத்துவமனை மீது நேற்று முன்தினம் வெடிமருந்து நிரப்பப்பட்ட ரக் ஒன்றை தற்கொலைப் படையைச் சேர்ந்தவர்கள் மோதித் தாக்கியதில் அது வெடித்து 40ற்கும் அதிகமானவர்கள் உயிரிழந்துள்ளனர். வைத்தியசாலை பணியாளர்கள் 50 பேர் உட்பட 150க்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர்.

இந்தக் குண்டு வெடிப்பில் மருத்துவமனையில் 4 மீற்றர் ஆழத்திற்கு பெரிய பள்ளம் ஏற்பட்டுள்ளது.

ரக்கை மோதி தாக்கியதில் இரண்டு தற்கொலைப் படையினர் பங்கேற்றிருக்கக் கூடும் என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

குண்டு வெடித்தபோது இந்த மருத்துவமனையில் 150 நோயாளிகளும் மருத்துவர்களும இருந்தனர் என்பதால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கக் கூடும் என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

இதுவரை 40 உடல்கள் இடிபாடுகளுக்கிடையே மீட்கப்பட்டுள்ளன. இந்தத் தாக்குதலுக்கு செச்சினிய தீவிரவாதிகள் காரணமாக இருக்கக்கூடும் என்று ரஷ்ய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

எனினும், கிளர்ச்சிவாதிகளின் பேச்சாளரான சலாம் பேக், இரகசியமாக விடுத்துள்ள அறிக்கையில், நாட்டுக்கு வெளியே வசிக்கும் செச்சினிய சனாதிபதி அகிலன்ட்டுக்கும் இந்தக் குண்டு வெடிப்புச் சம்பவத்திற்கும் எந்தவித தொடர்புமில்லையென தெரிவித்துள்ளார்.

1997ஆம் ஆண்டில் சனாதிபதியாக அகிலன்ட் தெரிவு செய்யப்பட்டிருந்தபோதிலும் பிரிவினைவாதிகளுக்கு எதிராக 1999ஆம் ஆண்டில் ரஷ்யா, புதிய தாக்குதல்களை ஆரம்பித்ததைத் தொடர்ந்து நாட்டைவிட்டு வெளியேறினார்.

# இந்தியாவில் தயாரிக்கப்பட்ட 'சுப்ப சொனிக்' பரீட்சிப்பு

(புதுடில்லி)

உள்நாட்டிலேயே வடிவமைக் கப்பட்டு தயாரிக்கப்பட்ட சுப்ப சொனிக் விமானம் நேற்று முன் தினம் பெங்களூரில் வெற்றிகரமாக சோதித்துப் பார்க்கப்பட்டது.

சோதனையின் போது இந்த விமானம் ஒலியை விட வேகமாக பறந்து சென்றது. விமானத்தை விங்கமாண்டர் விக்கிரம் சிங் இயக்கினார்.

11 கிலோ மீற்றர் உயரத்திற்கு சுமார் 30 நிமிடங்களுக்குப் பறந்து சென்ற இந்த விமானம், இயக்குவதற்கு நன்றாக இருந்ததாக விங் கமாண்டர் தெரிவித்துள்ளார்.

இந்திய இலகுரகப் போர் விமானம் ஒலியை விட வேகமாகப் பறக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டிருப்பது இதுவே முதல் முறையாகும். இது இந்திய விமானத்துறை வரலாற்றில் முக்கியமான மைல்கல் என்பது குறிப்பிடத்தக்கது.

# தென்துருவ கடல் பகுதியில் விஞ்ஞானிகள் ஆய்வு முயற்சி

தென் சமுத்திரத்தில் வாழும் உயிரினங்கள் சமுத்திரத்தின் அடியிலுள்ள பொருட்கள், அப்பிரதேசக் காலநிலை என்பன உட்பட பல தரப்பட்ட விடயங்கள் பற்றி ஆராய கடல் மற்றும் காலநிலை ஆராய்ச்சி குழுவினர் அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரிலிருந்து புறப்படவுள்ளனர்.

இந்த ஆராய்ச்சி நடவடிக்கைகளில் இரண்டு கோடி டொலர் செலவிடப்படும் என்றும் யப்பானின் கடலாராய்ச்சி கப்பலான மிரால் உபயோகிக்கப்படும் என்றும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தென் துருவத்தில் சுற்றியுள்ள செங்கடலில் 07 மாதங்கள் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட இருக்கின்றன.

அவுஸ்திரேலிய விஞ்ஞானியான இயன்பொயின்ரர் கருத்துக் கூறுகையில், கடலாராய்ச்சி சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளில் இது ஒரு முக்கியமான மைல்கல் ஆகும் என்று குறிப்பிட்டுள்ளார்.

அவுஸ்திரேலியா, யப்பான், தென்னமெரிக்கா, தென்னாபிரிக்கா ஆகிய நாடுகளின் விஞ்ஞானிகள் இந்தக் குழுவில் இடம் பெற்றுள்ளனர்.

# ஈராக்கின் புனரமைப்பு பணிகளுக்கு 10 ஆயிரம் கோடி டொலர்கள் தேவை!

## – அமெரிக்க நிர்வாகி கருத்து

ஈராக்கின் புனரமைப்பிற்கு 10,000 கோடி டொலர்வரை தேவைப்படும் என்று அமெரிக்க நிர்வாகி போல்றிமர் தெரிவித்துள்ளார்.

தொலைக்காட்சி ஒன்றிற்கு பேட்டியளிக்கையில், அடுத்த சில வருடங்களில் பெருமளவு நிதி ஈராக்கியப் புனரமைப்பிற்கு செலவிடப்பட வேண்டி இருக்கும் என்று கூறியுள்ளார்.

ஈராக்கின் பொருளாதாரத்தில் பெருமளவு தாக்கத்தை ஏற்படுத்தியிருந்த ஐக்கிய நாடுகளின் பொருளாதாரக் கட்டுப்பாடு சென்ற மே மாதத்தில் நீக்கப்பட்டுள்ளது.

இடைக்கால நடவடிக்கையாக ஈராக்கை நிர்வாகிப்பதற்கான அதிகாரம் அமெரிக்கா, பிரிட்டனிடம் ஒப்படைக்கப்பட்டு, எண்ணெய் விற்பனையை மேற்கொள்ளும் அதிகாரமும் அமெரிக்கா, பிரிட்டனிடம் ஒப்படைக்கப்பட்டது.

புதிய நிர்வாகம் தற்சமயம் அமைக்கப்பட்டுள்ளதனால், ஈராகிய எண்ணெய் ஏற்று மதியை அந்த நிர்வாகம் மேற்கொள்ளவுள்ளது.

சவுதி அரேபியாவுக்கு அடுத்து அதிக எண்ணெய் ஏற்றுமதி செய்வது ஈராக்தான்.

போல்றிமர் கருத்து கூறுகையில், எண்ணெய் ஏற்றுமதி மூலம் ஈராக்கின் செலவினங்களை ஈடுசெய்ய முடியும் என எதிர்பார்க்கப்படுவதாக கூறியுள்ளார்.

இதனிடையே செனட் சபை அங்கத்தவர்கள் ஈராக் புனரமைப்பு சம்பந்தமாக எந்தவித செலவின மதிப்பீட்டையும் புஷ் நிர்வாகம் சமர்ப்பிக்கவில்லை என குற்றம் சாட்டியுள்ளனர்.



பாக்தாத்துக்கு 120 கி.மீ. தொலைவிலுள்ள ஹபானியா பாலைவன மணலில் புதையுண்டுள்ள ஈராக்கிய விமானப்படைக்குச் சொந்தமான மிக் 21 ரக ஜெட் விமானம்.

# பாரதீய ஜனதாக் கட்சிக்கு பேரதிர்ச்சி; கூட்டணி அமைப்பதற்கு மாயாவதி மறுப்பு!

(புதுடில்லி)

உத்திரப் பிரதேசத்தை தவிர மற்றைய மாநிலங்களில் பாரதீய ஜனதாக் கட்சியுடன் பகுஜன் சமாஜ்கட்சி கூட்டணி வைத்துக் கொள்ளாது என அக்கட்சியின் தலைவரும் உத்தரப் பிரதேச முதலமைச்சருமான மாயாவதி கூறியுள்ளார்.

இதனால் 05 மாநில சட்டப் பேரவைத் தேர்தலில் பாரதீய ஜனதாவுக்கு பெரும் இழப்பு ஏற்படும் என்பதனால் அதன் தலைவர்கள் அதிர்ச்சியடைந்துள்ளார்கள்.


உத்தரப் பிரதேசத்தில் செல்வி மாயாவதி தலைமையில் பாரதீய ஜனதா, பகுஜன் சமாஜ் கூட்டணி அரசு நடந்து வருகின்றது.

தாஜ்மகால் வணிக வளாக விவகாரம் தொடர்பாக, மத்திய அமைச்சர் ஜக்மோகனை பதவி விலக்குமாறு மாயாவதி வலியுறுத்தியதால், இரு கட்சிகளுக்குமிடையே உறவு சீர்குலைந்துள்ளது.

இந்த நிலையில் சிம்லாவில் நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் பேசிய மாயாவதி, பாரதீய ஜனதாவுடன் கூட்டணி உத்தரப் பிரதேசத்திற்கு மட்டும்தான் மற்றைய மாநிலங்களில் அக்கட்சியுடன் கூட்டணி வைத்துக் கொள்ளப் போவதில்லையென்று திட்டவட்டமாக கூறியுள்ளார்.

பகுஜன் சமாஜ் கட்சி செல்வாக்குடன் விளங்கும் சத்தீஸ்கர், ராஜஸ்தான், மத்திய பிரதேசம் உட்பட 05 மாநிலங்களில் விரைவில் தேர்தல் நடைபெறவிருக்கும் நிலையில், மாயாவதி இவ்வாறு அறிவித்திருப்பது அங்கு பாரதீய ஜனதா தோல்வியடையும் வாய்ப்பு உருவாகியுள்ளது.

அணுவாயுதம் தொடர்பான பிரச்சினைக்குரிய பேச்சுக்களுக்கு வடகொரியா இணங்கியுள்ள நிலையில் வடகொரியா – கேசங் என்ற இடத்தில் எண்ணெய் தாங்கிகளுக் கூடாக நடந்துசெல்லும் இராணுவ வீரர்.



# விளையாட்டு அரங்கு

-ஜெயந்திரன்

## துடுப்பாட்டத்தில் பிரகாசிக்க விரும்புகிறேன்

இங்கிலாந்து அணியின் டெஸ்ட் அணித் தலைவரும் பிரபல துடுப்பாட்ட வீரருமான நசார்



ஹுசைன் தனது தலைமைப் பதவியில் இருந்து விலகியுள்ளார்.

கடந்த நான்கு வருடமாக இங்கிலாந்து அணியின் தலைமைப் பதவியை வகித்துவந்த ஹுசைன் 2003 உலகக் கிண்ணப்போட்டியின் பின்னர் ஒருநாள் போட்டிகளுக்கான தலை மைப் பதவியில் இருந்து விலகிக்கொண்டார்.

தொடர்ந்து டெஸ்ட் போட்டிக ளுக்கு தலைமை வகித்துவந்த ஹுசைன் தென்னா பிரிக்காவுடனான முதல் டெஸ்ட் போட்டியை அடுத்து டெஸ்ட் அணித்தலைவர் பதவியில் இருந்தும் விலகுவதாக அறிவித் துள்ளார்.

தனது பதவி விலகல் குறித்து 35 வயதான நசார் ஹுசைன் கூறும் போது, எனது தலை மைப்பதவியை விட்டுக் கொடுக்கும் நேரம் வந்து விட்டது. என்னைப்பொறுத்த வரை யில் ஒருநாள் போட்டிக்குத் தலைமை தாங்கும் மைக்கல் வோகன் கடந்த ஐந்துமாத கால மாக ஒருநாள் போட்டிகளில் தனது தலைமைத்துவ திறமைகளை நிருபித்து வருகிறார்.

எனவே தற்போது டெஸ்ட் போட்டிகளுக்கு அவரே தலைமை தாங்கும் நேரம் வந்து விட்டது. பல இளம் வீரர்களை உள்ளடக்கிய இங்கிலாந்து அணியை சிறப்பாக அவர் வழிநடத்துவார் என நம்புகிறேன் என்றார்.

தனது தலைமைப்பதவியை ராஜினாமாச் செய்தாலும் தொடர்ந்து டெஸ்ட் போட்டியில் விளையாட விருப்பம் தெரிவித்த ஹுசைன் நான் எனது அணியை இழந்துவிட்டதாக ஒருபோதும் நினைத்ததில்லை. அணியின் சக வீரர்களிடமிருந்து எப்போதும் எனக்கு முழு ஒத்துழைப்பு கிடைத்தது. தற்போது தலை மைப் பதவியை இறக்கி வைத்துவிட்டு துடுப் பாட்ட மட்டையை கையில் ஏந்தி ஓட்டம் குவிப்பதை முக்கிய குறிக்கோளாகக் கொண் டுள்ளேன்.

தேர்வாளர்கள் என்னை வெளியேறுமாறு சொல்லும் வரை சிறப்பான ஒரு ஆட்டத் தை வெளிப்படுத்தக் காத்தி ருக்கிறேன். தென்னா பிரிக் காவுடனான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் வோகன் தலைமையில் விளையாடுவது தனக்கு மகிழ்ச்சி யையும் வித்தியா சமான அனுபவத் தையும் பெற்றுக் கொடுக்கும் என்றார்.

இது இவ்வாறி ருக்க அண்மையில் நிறைவு பெற்ற முக் கோணத் தொடரின் ஒருநாள் இறுதிப்போட்டியில் தென்னா பிரிக்க அணியை வோகன் தலைமையிலான இங்கிலாந்து அணி இலகுவாக வெற்றிபெற்றதைத் தொடர்ந்து டெஸ்ட் போட்டி களுக்கும் அவரே தலைமை தாங்க வேண்டும் என்றகுரல் இங்கிலாந்தில் ஒலிக்கத் தொடங்கியிருந்தது.

இந்நிலையில் தென்னாபிரிக்கா வுடனான முதல் டெஸ்ட் போட்டி தென்னாபிரிக்காவுக்கு சாதகமான நிலையை தோற்றுவித்திருந்த போதும் ஒருவாறு வெற்றி தோல்வி இன்றி முடிவடைந்தது. இந்த நிலையில் ஹுசைன் ஓய்வை அறிவித்தார்.

இப்போட்டியில் வோகனின் அபார ஆட்டமே மேற்படி போட்டி சமநிலை யில் முடிவதற்கு வழிசமைத்தது.

இந்தியரான நசார் ஹுசைன் இங்கிலாந்து அணியில் இடம் பிடித்தது அணித்தலைவர் பதவியை வகிக்கும் அளவுக்கு உயர்ந்தது. கிரிக்கெட் உலகில் ஒரு சகாப்தமாக கருதப் படும் அதேவேளை அந் நாட்டு ரசிகர்களின் நம்பிக்கைக்கு உரியவராகவும் திகழ்ந்தார். சில காலம் புகழின் உச்சியில் இருந்த ஹுசைன் அணித்தலைவர் பதவியை ராஜினா மாச் செய்துள்ள போதும் அணி வீரர்களால் இன்றும் போற்றப்படும் வீரராகவே உள்ளார்.

1968ஆம் ஆண்டு மார்ச் மாதம் 28ஆம் திகதி தமிழகத்தின் தலை நகர் சென்னையில் பிறந்த நசார் ஹுசைன் சிறந்த வலதுகை துடுப்பாட்ட வீரராவார்.

1990ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் மேற்கிந்தியத்தீவுக்கு எதிரான டெஸ்ட் போட்டி யின் மூலம் டெஸ்ட் கிரிக்கெட் உலகில் அறிமுகமான இவர். இதுவரை 84 போட்டி களில் விளையாடியுள்ளார்.

12 சதங்கள் உட்பட 4927 ஓட்டங் களை குவித்துள்ள இவர் 36.76 என்ற சராசரியைப் பெற்றுள்ளார். அதிகூடுதலாக 207 ஓட்டங் களைப் பெற்றதுடன் 45 டெஸ்ட் போட்டிக ளுக்கு தலைமை தாங்கியுள்ளார்.

இவரது தலைமையின் கீழ் அணி 17 வெற்றிகளையும் 15 தோல்வி களையும் சந்தித்துள்ளது. 13 போட்டிகள் வெற்றி தோல்வி இன்றி முடிவடைந்துள்ளது. அணித் தலைவராக இருந்த போது 2487



ஓட்டங்களையும் இவர் பெற்றுள்ளார்.

அத்துடன் 1989ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் பாகிஸ்தானுக்கு எதிரான போட்டி ஒன் றின் மூலம் ஒருநாள் போட்டியில் களம் புகுந்த ஹுசைன் 88 போட்டிகளில் ஒரு சதம் அடங்கலாக 2.332 ஓட்டங் களைப் பெற்றுள்ளதுடன் 30.28 என்ற சராசரியையும் பெற்றுள்ளார்.

1999ஆம் ஆண்டு உலகக் கிண் ணப் போட்டிக்கு தலைமை வகித்த டெஸ்ட் அணியில் இருந்து ஓய்வு பெறப் போவதாக தற்போது அறிவித்துள்ள விக்கெட் காப்பாளர் அலெக்ஸ் ருவேர்ட் தலைமைப் பதவியில் இருந்து விலக புதிய தலைவராக நசார் ஹுசைன் நியமிக் கப்பட்டார். இது போன்றே 2003ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டி யும் நசார் ஹுசைனின் கிரிக்கெட் வாழ்க் கைக்கு ஒரளவு முற்றுப் புள்ளி வைத்துள்ளது என்றே கூறலாம்

## மெக்கிலின் பிரவேசம் வோர்னின் வருகையைத் தடுக்குமா?

அவுஸ்திரேலிய அணியின் சுழற் பந்து வீச்சாளரும் உலகில் தலை சிறந்த பந்து வீச்சாளர்களில் ஒருவருமான ஷேன்வோர்னின் இடத்தை நிரப்பும் அளவுக்கு மற்று மொரு சுழற்பந்து வீச்சாளரான ஸ்டுவர்ட்மெக்கில் அவுஸ்திரேலிய அணியில் இடம்பிடித்துள்ளார்.

பங்களாதேஷ் அணிக்கு எதிரான இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டியில் ஆட்டநாயகன் விருதைப் பெற்ற இவர், எதிர்காலத்தில் ஷேன்வோர்னின் வருகைக்கு போட்டி யாக அமையலாம் என எதிர்பார்க் கப்படுகிறது.

ஷேன்வோர்ன் மறுபடி அணிக்கு வரும் வரை சிறப்பாகவும் சவாலா கவும் விளையாடப் போவதாக தெரி வித்துள்ள அவர், அச்சந்தர்ப்பத் தைச் சிறப்பான முறையில் பயன் படுத்தப்போவதாகத் தெரிவித்துள்ளார்.

இது ஷேன்வோர்னின் வயிற்றை கலக்குவதாக அமைந்துள்ள தாகவே கிரிக்கெட் ஆர்வலர்களால் பார்க்கப்படுகின்றது.

மெக்கில் வோர்னைவிட ஒருவயது குறைந்தவர் இது குறித்து அவர் குறிப்பிடுகையில், எனது கிரிக்கெட் வாழ்க்கையில் வோர்னுக்கு பங்குண்டு. காரணம் அவர் அணியில் இல்லாததே எனக்கு வாய்ப்பு கிடைத்தது. இதை நான் சிறப்பாக பயன்படுத்திக் கொள்ளப்போகின்றேன்.

1998-99 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இடம்பெற்ற அவுஸ்தி ரேலிய தொடரில் வோர்ன் காயம் காரணமாக போட்டி யில்இருந்து ஒதுக்கியிருந்தபோது மெக்கில் அவருக்கு பதிலாக விளையாடி நான்கு டெஸ்ட் போட்டி களில் 27 விக்கெட்டுக்களை வீழ்த்தியி ருந்தார். இருந்தும் தொடர்ந்து அணியில் இடம்பிடிக்க முடியவில்லை.

டெஸ்ட் போட்டிகளில் இதுவரை 100 விக்கெட்டுக்கள் வரை பலர் பெற்றிருந்தாலும் ஒரு போட்டியில் ஐந்து விக்கெட் சராசரியோடு விக்கெட்டுக்களை வீழ்த்தியி ருப்பவர்கள் சிலரே. அவர்களில் சிறிலங்கா அணியின் நட்சத்திர சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன், டெனிஸ்லில்லி ரிச்சர்ட் ஹட்லி ஆகியோர் முக்கியமான வர்கள். இது குறித்து அவுஸ். டெஸ்ட் அணித் தலைவர் ஸ்டீவ்வோ கூறும்போது, வோர்னின் இடத்தை மெக்கில் பிடிப்பாரா என்பது ஒருபுறம் இருக்க எதிர்காலத்தில் என்ன நடக்கும் என்பதை உறுதியாக கூற முடியாது. மெக்கில் ஷேன்வோர்னின் நிழல் அல்ல அவருக்கென்று தனித் திறமையுண்டு. இது அவர் திற மையை வெளிக்காட்டும் சந்தர்ப்பம் என்றார்.

97/98 ஆம் ஆண்டு காலப் பகுதியில் தென்னாபிரிக்காவுக்கு எதிராக தனது டெஸ்ட் வாழ்க் கையை ஆரம்பித்த மெக்கில் 24 டெஸ்ட் போட்டிகளில் 121 விக்கெட் டுக்களை வீழ்த்தியுள்ளார்.

## சர்ச்சைகளின் சொந்தக்காரன்


பயனில்லாத உருப்படியில்லாத வாழ்க்கையை வாழும் தான் சாகவிரும்புவதாகவும் மறு ஜென்மத் திலாவது சிறப்பான வாழ்க்கை வாழ விரும்புவதாக தெரிவித்த டைசன் என்ற வேதாளம் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறிவிட்டது.

திடீர் ஞானம் வந்தது போல் தான் செய்த தவறுகளுக்காக வருந்து வதாக பேட்டியளித்த டைசன் ஒருவாரம் கூட பூர்த்தியாகாத நிலை யில் மீண்டும் ஒரு சர்ச்சை யில் சிக்கியுள்ளார்.

குத்துச்சண்டைப் போட்டிகளை நடத்தும் கிங் என்பவரைத் தாக்கிய தாக தற்போது டைசன் மீது குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

எப்போதுமே அடிதடியில் ஈடுபடு வதில் ஆவல்காட்டும் டைசன் ஏதோ பிரச்சினையாக கிங் என்பவருடன் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டார்.

வாய்த்தர்க்கம் முற்றவே கிங்கின் முகத்தில் ஓங்கிக் குத்தியுள்ளார். டைசன் விட்ட குத்தில் முகத்தில் உள்ள



எலும்பு அதிகமாக பாதிக்கப்பட் டுள்ளதாகவும் கிங் குற்றம்சாட்டியுள் ளார். சர்வதேச விளையாட்டரங்கில் சர்ச்சைகளுக்கென்றே இருக்கும் டைசன் ஏற்கனவே மூன்று வாரங் களுக்கு முன் ஹோட்டலில் இரு வரை தாக்கியமைக்காக கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## ஓய்வுபெறுகிறார் ஸிடேன்?

1998ஆம் ஆண்டு பிரான்சில் நடைபெற்ற உலகக்கிண்ண கால்பந்து போட்டியில் பிரான்ஸ் அணி கிண்ணத்தைக் கைப்பற்றக் காரணமாக இருந்த பிரான்ஸ் அணியின் நட்சத்திர கால்பந்தாட்ட வீரர் ஸினடின் ஸிடேன் 2005ஆம் ஆண்டு உதைபந்தாட்ட அரங்கிலி ருந்து ஓய்வுபெறப்போவதாக அறிவித்துள்ளார்.

தற்போது ரியல் மட்ரின் அணிக் காக விளையாடிவரும் ஸிடேன் 1998 மற்றும் 2000ஆம் ஆண்டுகளில் சிறந்த உதைபந்தாட்ட வீரராக சர்வதேச உதைபந்தாட்டக் கழகத தால் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

2002ஆம் ஆண்டு நடைபெற்ற உலகக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டியில் முன்னாள் உலகச் சம்பியன் என்ற நிலையில் பெரும் பரபரப்புக்கு மத்தியில் களம் புகுந்த பிரான்ஸ் அணி உலகக் கிண்ண இறுதிச் சுற்றிற்கு முதல் தடவை யாக கலந்துகொண்ட செனகல் அணியிடம் அதிர்ச்சித் தோல்வி அடைந்தது. அப்போது காயம் கார ணமாக அணியில் கலந்துகொள்ள முடியாது போன ஸிடே னின் பெறுமதி உலக அரங்கில் பேசப்பட்டது.

தற்போது 32 வயதை யுடைய ஸிடேன் 2005ஆம் ஆண்டு வரைரியல் மட்ரில் அணிக்காக விளை யாட ஒப்பந்தமாகியுள்ளார். 2001ஆம் ஆண்டுவரை ஜுவண்டஸ் கழகத்துக் காக விளையாடி வந்த ஸிடேன் 2001ஆம்ஆண்டு பெரும் தொகைப் பணத் துக்கு ரியல்மட்ரில் அணிக்காக ஒப்பந்தம் செய்யப்பட்டார்.

தனது ஓய்வு குறித்து அவர் தெரிவிக்கும் போது 2005ஆம் ஆண்டு எனது ஓய்வை அறிவிக்க சரி யான நேரமாகக் கருது கிறேன் எனத் தெரிவித் துள்ளார். அப்போது



எனக்கு 33 வயது ஆகிவிடுவதுடன் மட்ரில் அணியுடனான ஒப்பந்தம் நிறைவடைகின்றது என்றார்.

இது இவ்வாறிருக்க அண்மையில் நிறைவுபெற்ற ஸிடேனின் சிறப்பான ஆட்டத்தால் பிரான்ஸ் அணி ஐரோப் பிய கால்பந்து கிண்ணத்தையும் தட்டிச் சென்றது குறிப்பிடத்தக்கது.

## கவாஸ்கருக்கு லில்லி பதிலடி

மைதானத்தில் எதிரணியினருடன் வார்த்தை மோதல்களில் ஈடுபடுவதன் மூலம் கிரிக்கெட் கண்ணியத்துக்கு பங்கம் விளைவிக்கின் றார்கள் என்று அவுஸ்திரேலிய அணிமீது குற்றம் சுமத்திய சுனில் கவாஸ்கருக்கு டென்னிஸ்லில்லி கடுமையான பதிலடி கொடுத்துள்ளார்.

வார்த்தை மோதல்கள் டபிள்யூ.ஜி.கிரேஸ் காலத்திலேயே இருந்தன. கிரிக்கெட் மட்டுமல்ல எந்தவொரு விளையாட்டிலும் எப்போதும் அது தொடரும் இது மிகவும் மோசமானது எனக் கருதப்பட்டால் அதைத் தடுப்பதற்கு அதிகாரிகள் இருக்கின்றனர்.

நடுவர் அவுட் கொடுத்தவுடன் துடுப்பை தூக்கிக்கொண்டு வீட்டை நோக்கி செல்பவர்களால்தான் வேடிக்கை ஏற்படுகிறது என்றார்.

1981ஆம் ஆண்டு பெப்ரவரியில் மெல்போர்னில் நடைபெற்ற போட்டியின் போது டென்னிஸ்லில்லியின் பந்துவீச்சின்போது எல்பிடபிள்யூ முறையில் கவாஸ்கர் ஆட்டம் இழந்தார். அத்தீர்ப்பை ஏற்றுக்கொள்ளாத கவாஸ்கர் மறுமுனையில் ஆடிக்கொண்டிருந்த சேத்தன் சௌஹானையும் இழுத்துக்கொண்டு களத்தில் இருந்து வெளியேறினார்.

இச் சம்பவம் குறித்தே டென்னிஸ் லில்லி மேற்கண்டவாறு தெரிவித் துள்ளார்.

# தமிழ் அரச கருமமொழியாக்கப்பட்டிருந்தும் அமுல்படுத்தலில் திருப்தியற்ற நிலையே உள்ளது!

## - ஆணைக்குழுத் தலைவர் குணசேகர கருத்து

(கொழும்பு)

**தமிழ் அரச கருமமொழியாக்கப்பட்டு 16 வருடங்கள் கடந்தும் அமுல்படுத்தலில் திருப்தியற்ற நிலைமையே காணப்படுவதாக அரச கரும மொழிகள் ஆணைக்குழுவின் தலைவர் டி.ஈ. டபிள்யூ குணசேகர கவலை தெரிவித்துள்ளார்.**

அத்துடன் அரசில் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் தலைவர்கள் போதியளவு இல்லாமையும் 20 வருடகால யுத்தமும் இதற்கான காரணங்களென அறிய வருவதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

உள்ளூராட்சித்துறை அலுவல்களை மேம்படுத்தும் பொருட்டு வியாழக்கிழமை ராஜகிரியவில் அமைந்துள்ள அரச மொழிகள் ஆணைக்குழுவின் கேட்போர் கூடத்தில் கருத்தரங்கொன்று இடம்பெற்றது.

சிங்கள மொழி அரச கரும மொழியாக்கப்பட்ட சமயம் அதிகளவில் சிங்கள அரசியல் தலைவர்கள் சிங்கள மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தியிருந்தனர். ஆனால் தமிழ் மொழி அரச மொழியாக்கப்பட்ட போது அவ்வாறான சூழ்நிலை இருக்கவில்லை.

பாராளுமன்றத்தில் சட்டங்கள் நிறைவேற்றப்பட்டாலும் அவை சென்றடைவதில்லை. இலங்கையில் பொலிசாரின் எண்ணிக்கை 60 ஆயிரமாக இருக்கின்ற போதிலும் 600 பொலிஸ் அதிகாரிகளே தமிழ் தெரிந்தவர்களாக இருக்கின்றனர்.

தேசிய வைத்தியசாலையில் 50 சதவீதம் தமிழ் தெரிந்த வைத்தியர்கள் உள்ளனர். ஆனால் அங்கு தொழில் புரியும் நூறு சதவீத தாதியர்களில் ஒருவருக்கும் தமிழ் தெரியாது.

இன்று இலங்கையின் அரச சேவையில் மூன்று இலட்சம் பேர் உள்ளனர். ஆனால் தமிழ்மொழி தெரிந்தவர்கள் ஆறு சதவீதமே இருக்கின்றனர்.

முன்பு தமிழ் மொழியில் கடிதங்கள் அனுப்பப்பட்டு வந்தன. ஆனால் தற்போது அரசாங்க அலுவலில் இந்நிலைமை குறைவாகவே உள்ளது.

என ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார்.

## போசாக்கு உணவு வழங்கல்

தமிழர் புனர்வாழ்வுக்கழக ஆதரவுடன் முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலைய ஒழுங்கமைப்புடன் உலக தரிசன நிதியுதவியுடனும் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தால் நடைமுறைப்படுத்தப்படும் முன்பள்ளிகளான செந்தூரன், செந்தமிழ், செந்தமிழினி முன்பள்ளிகளுக்கான போசாக்கு உணவு வழங்கல் ஆரம்ப நிகழ்வு நாளை நடைபெறவுள்ளது.

## மட்டு. கிரான்குளத்தில் விபத்து; வயோதிபர் ஒருவர் மரணம்

மட்டக்களப்பு கிரான் குளத்தில் செவ்வாய்க்கிழமை மாலை இடம்பெற்ற வாகன விபத்தில் வயோதிபர் ஒருவர் ஸ்தலத்திலே பலியாகியுள்ளார். வீதியால் வேகமாக வந்த லொறியொன்று வீதியால் நடந்து சென்ற வயோதிபரில் மோதியதாலே இவ்விபத்து ஏற்பட்டுள்ளது. பலியானவர் கிரான்குளம் தர்மபுரத்தைச் சேர்ந்த கே.கந்தையா ( வயது 65) எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஆத்திரமுற்ற பிரதேசமக்கள் லொறியை மறித்து ஆர்ப்பாட்டம் செய்ததுடன் சாரதியையும் நடத்துனரையும் தாக்கமுற்பட்டுள்ளனர். ஸ்தலத்திற்கு விரைந்த விசேட அதிரடிப்படையினர் சாரதியையும் லொறியையும் வேறு இடத்திற்கு கொண்டு செல்ல முயற்சித்தபோது பொதுமக்களுக்கும் விசேட அதிரடிப்படையினருக்குமிடையில் முறுகல் நிலை ஏற்பட்டது.

இதன் காரணமாக அக்கிராம சேவையாளரை விசேட அதிரடிப் படையினர் தாக்கமுற்பட்டுள்ளனர். நிலைமையை அறிந்து ஸ்தலத்திற்கு விரைந்த காத்தான்குடிப் பொலிஸாரும் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஞா.கிருஸ்ணபிள்ளையும் நிலைமையை கட்டுப்பாட்டுக்கு கொண்டுவந்தனர்.

## வட-கிழக்கு வைத்தியசாலைகளில் 150 வைத்தியர்கள் நியமனம்

### - சுகாதார அமைச்சர் தகவல்

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் மருத்துவர்களுக்கு பற்றாக்குறை நிலவுவதாக சிறிலங்காவின் சுகாதார அமைச்சர் தயாரட்ண தெரிவித்துள்ளார்.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் அமைந்திருக்கும் மருத்துவமனையில் கடமையாற்ற 150 மருத்துவர்களை புதிதாக நியமிக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்ப தாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## யாழ். போதனா வைத்தியசாலைக்கு நோயாளரை எடுத்துச் செல்லும் பாதை மோசமாகப் பாதிப்பு!

### நோயாளர் பெரும் அவஸ்தை

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலைக்கு வெளிநோயாளர்களைக் கொண்டு செல்லும் முற்றப் பகுதியின் தரை மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளதால் நோயாளர்கள் மிகவும் அவஸ்தைக்குள்ளாகின்றார்கள்.

நோயாளர்களைக் கொண்டு செல்ல முடியாதவாறு இப்பாதைப் பகுதி குன்றும் குழியுமாகவும், கற்கள் புரண்ட நிலையிலும் காணப்படுகிறது. இதனால் நோயாளர்களை எடுத்துச் செல்லும் வண்டிகள் செல்ல முடியாத நிலை உள்ளது.

இதேவேளை, 24ஆம் இலக்க விடுதிக்கு நோயாளர்களை எடுத்துச் செல்லும் வாயிலின் முற்றப் பகுதியின் தரை, சமதரை அற்றுக் காணப்படுகின்றது.இதனால், நோயாளர்களைக் கொண்டு செல்லும் தகரத் தள்ளு வண்டில்களின் அதிர்வுகளால் நோயாளர்கள் மிகவும் அவஸ்தைப்படுகின்றார்கள். இந்த 24ஆம் விடுதி காயப்பட்ட நோயாளர்களைப் பராமரிக்கும் விடுதி என்றும், இது தொடர்பாக வைத்தியசாலை வட்டாரங்கள் எந்த விதமான நடவடிக்கைகளும் எடுக்க வில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (33)

## கூட்டம்

(அலுவலக செய்தியாளர்)

கிளி.மாவட்டக் கல்விக்குழுக் கூட்டமும் சுகாதாரக் குழுக் கூட்டமும் எதிர்வரும் 5ம் திகதி கிளி. மாவட்ட அரச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளதென கிளி. மாவட்ட அரச அதிபர் தி. இராசநாயகம் தெரிவித்துள்ளார்.

அன்றைய தினம் காலை 10.00 மணிக்கு கல்விக்குழுக் கூட்டமும் பகல் 11.30 மணிக்கு சுகாதாரக் குழுக் கூட்டமும் நடைபெறவுள்ளதென தெரிவித்துள்ளார். (சோ)

## அன்புச்சோலை மூதாளர் பேணலக நிதிக்காக வவுனியாவில் வீரதீர சாகஸ நிகழ்வு

(வவுனியா செய்தியாளர்)

கிளிநொச்சி அன்புச்சோலை மூதாளர் பேணலக நிதிக்காக வவுனியாவில் மாபெரும் வீரதீர சாகஸ விளையாட்டுக்கள் நடாத்தப்பட்டுள்ளன.

கிளிநொச்சி அன்புச்சோலை மூதாளர் பேணலக நிதிக்காக வவுனியா மாவட்ட சமுதாய முன்னேற்ற நிலையம் ஏற்பாடு செய்த வீரதீர சாகஸ விளையாட்டுக்கள் கடந்த வியாழனன்று வவுனியா நகரசபை மைதானத்தில் நடைபெற்றன.

பொலிகண்டி பொலிகை ஒன்றுமை விளையாட்டுக்கழக வீரர்களினால் இவ்வீரதீர சாகஸ விளையாட்டுக்கள் நடாத்தப்பட்டன. இதில் வைத்தீஸ்வரன் கேதீஸ்வரன் என்ற வீரன் தனது உடலுக்கு மேலாக ஐம்பது உழவு இயந்திரங்களை ஏற்றி சாதனை படைத்தார். தங்கவேல் விஜயகுமார் என்ற வீரனின் இரு கால்களுக்கு மேலாகவும் சம நேரத்தில் இரு உழவு இயந்திரங்களை ஏற்றினார். இதேவேளை தங்கவேல்-கஜந்தினி என்ற பெண் வீராங்கனை தனது உடலுக்கு மேலாக கன்ரர் ரக வாகனத்தை ஏற்றி சாதனை புரிந்தார். சிவானந்தம்-சுமணா என்ற சிறுமி பல வீரதீர விளையாட்டுக்களைச் செய்து பார்வையாளர்களின் பாராட்டைப் பெற்றார். (10)

## கண்டெடுப்பு

சிதம்பரப்பிள்ளை சிவபாதம் புதுக்குடியிருப்பு, இராமையா ரகுநாதன் வேரவில், கிளிநொச்சி ஆகியோரது அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டு புதுக்குடியிருப்பு ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் ஆதாரம் காட்டி பெற்றுக் கொள்ளவும் (26)

## சந்திப்பு

பட்டப்பின் கல்வி டிப்ளோமா பகுதி I பரீட்சைக்குத் தோற்றும் கிளிநொச்சிப் பிராந்திய நிலைய ஆசிரிய மாணவர்களுக்கான சந்திப்பு இன்று காலை 9.00 மணிக்கு கிளி/மத்திய கல்லூரியில் நடைபெறும். உரியவர்களைத் தவறாது கலந்து கொள்ளுமாறு சிரேஷ்ட விரிவுரையாளர் கி.சின்னராசா கேட்டுக்கொள்கிறார்.

## உள்ளூராட்சி மன்றப் போட்டிகளில் கிளி.கரைச்சி பி.ச.முதலிடம்

(அலுவலக செய்தியாளர்)

உள்ளூராட்சி மன்றப் போட்டிகளில் கிளி.கரைச்சிப் பிரதேச சபை முதலாமிடத்தினைப் பெற்றுக் கொண்டது.

உள்ளூராட்சி மன்றத்தினால் கிளி.மாவட்டத்தில் நடாத்தப்பட்ட மேற்படி போட்டியிலேயே கடந்த வாரம் கரைச்சிப் பிரதேச சபை முதலாமிடத்தைப் பெற்றுக் கொண்டது.

இதற்கான பரிசில் கடந்த வாரம் திருகோணமலை யோசெப் கல்லூரியில் வைத்து மாகாண அமைச்சின் செயலர் சிவசிதம்பரத்தினால் கரைச்சிப் பிரதேச சபை செயலர் திருமதி.தி.அன்னலிங்கத்திடம் வழங்கப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (சோ)

## - யாழ். சிறைச்சாலையிலுள்ள -

## இந்திய மீனவர்களின் போராட்டம் நிறுத்தம்; விசாரணைக்கு கொழும்பிலிருந்து சட்டத்தரணி!

(வடமராட்சி)

வடமராட்சி கடற்பரப்பில் அத்துமீறிப் பிரவேசித்தார்கள் என்ற குற்றச் சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு கடந்த ஐந்து மாதங்களுக்கு மேலாக யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்கள் கடந்த மூன்று தினங்களாக மேற்கொண்டிருந்த உண்ணாவிரதப் போராட்டத்தை நேற்று முன்தினம் மாலையுடன் இடைநிறுத்தியுள்ளனர்.

முன்னதாக இந்திய மீனவர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி மீனவர்கள் விசாரணைக்கு போதிய ஒத்துழைப்பு வழங்கவில்லை என்று காரணம் தெரிவித்து யாழ். மேல் நீதிமன்றில் அவர்கள் மீதான குற்றப் பத்திரங்களை நீதிமன்றில் மீளளித்துவிட்டார்.

எனினும் இவர்கள் சார்பில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த சட்டத்தரணிகள் எவரும் ஆஜராகாத நிலையில் இது பற்றி கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவராலயத்திற்கு தகவல் வழங்கப்பட்டது.

இந்நிலையில் கைதிகள் மீதான குற்றச்சாட்டுக்கள் தொடர்பான வழக்கு விசாரணைகளில் ஆஜராக தென்னிலங்கையில் இருந்து சட்டத்தரணி ஒருவரை ஆஜராக கால அவகாசம் ஒன்றை இந்தியத் தூதுவராலயம் நேற்று முன்தினம் கோரியுள்ளது.

இந்நான்கு மீனவர்களுக்கு எதிராகவும் இலங்கை நியாயாதிக்க சட்டத்தின் கீழ் தனித்தனி வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் விசாரணைகளை எதிர்வரும் 6ஆம் திகதி மேல் நீதிமன்ற நீதிபதி வரதராஜா ஒத்திவைத்துள்ளார்.

அதுவரை மீனவர்களை யாழ். சிறைச்சாலையில் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்க அவர் உத்தரவிட்டுள்ளார்.

இதனை அடுத்து மீனவர்கள் தமது உண்ணாவிரதத்தைக் கைவிட்டுள்ளதாக யாழ். சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.(27).(33)

## மதுபான நிலையத்தை அகற்ற பொதுமக்கள் வேண்டுகை

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி கட்சன் வீதிப் பகுதியில் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் மதுபான விற்பனை நிலையம் அமைந்துள்ளதால் மாணவர்கள், பொதுமக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கும் அச்சத்திற்கும் முகம்கொடுக்கின்றனர்.

மதுபான நிலையத்தில் மது அருந்திவிட்டு பலர் மதுபோதையில் மக்களுக்கு இடையூறாக செயற்படுவதுடன் தகாத வார்த்தைகளால் தாராளமாகப் பேச முனைவதுடன் தள்ளாடித் திரிவதனால் பாடசாலை மாணவர்கள், பெண்கள் சற்று அச்சத்துடனே, அவ்விடத்தால் செல்ல வேண்டியுள்ளது. சிறுசிறு சண்டை சச்சரவுகளும் நடைபெறுகின்றன.

தேவாலயங்கள், கல்வி நிலையங்கள், பொது அமைப்புக்கள் அமைந்துள்ள இடத்திலிருந்து குறித்த சட்டத்திற்கமைவாக அரை மைல்களுக்கு, அப்பால் தான் மதுபான நிலையங்கள் இருக்க வேண்டும். ஆனால், இந்த மதுபான நிலையம் 500 மீற்றருக்கு அண்மையாகவே அமைந்துள்ளது. மதுபான நிலையம் இடம்மாற்றம் செய்யும் விடயம் தொடர்பாக பல நிறுவன அமைப்புக்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டும் இதற்கான தகுந்த பதில் கிடைக்கவில்லை எனவும், தற்போது இந்த மதுபான நிலையத்தினை வேறு இடத்திற்கு மாற்றம் செய்து மாணவர்கள், பொது மக்கள் அனைவரும் அசௌகரியங்களுக்கு முகம்கொடுக்காத வகையில் தமது வியாபாரத்தினை மேற்கொள்ளுமாறு கேட்கின்றனர். (12)

## பாண்டியன்குளம் பகுதியில் ஒரு கி.மீ. தூர வீதி திருத்தம்

பல வருடங்களாக பாவனையின்றி மக்களின் போக்குவரத்துக்குத் தடையாக இருந்த பாண்டியன்குளம் பிரதேச செயலர் பிரிவில், விநாயகபுரம் 05ம் பகுதியின் 28ம் சந்தியிலிருந்து ஒரு கிலோ மீற்றர் வரையிலான வீதி திருத்தப்பட்டுள்ளது. தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் பாண்டியன்குளம் பிரதேச செயலகமும் 05ம் பகுதி சமாசக்காரர் அமைப்பும் இணைந்து இவ்வீதியைப் பூரணமாக திருத்தி அமைத்துள்ளதாக பொருண்மிய செய்திக் குறிப்பொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (26)

# ஜே.வி.பி.—சு.க. கூட்டுபற்றி பொ.ஐ.மு. மத்தியகுழு ஆராயும்

பொது சன ஐக்கிய முன்னணியின் மத்திய நிறைவேற்றுக் குழுவின் விசேட கூட்டம் நாளை திங்கட்கிழமை நடைபெறவுள்ளது. இந்தக் கூட்டத்தில் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும், மக்கள் விடுதலை முன்னணிக்கும் இடையே மேற்கொள்ளப்படவுள்ள கூட்டமைப்பு தொடர்பாக விரிவாக கலந்துரையாடப்படும் என முன்னணியின் பொதுச செயலாளர் டி.எம். ஜயரத்ன தெரிவித்தார்.

சனாதிபதி தலைமையில் நடைபெறும் இந்தக் கூட்டத்தில் பொது சன ஐக்கிய முன்னணியில் அங்கத்துவம் வகிக்கும் சகல கட்சிகளின் பிரதிநிதிகளும் கலந்து கொள்வார்கள் எனக் கூறினார்.

இந்தக் கூட்டத்தின் போது கட்சிகளின் ஆலோசனைகள் பெறப்பட்டு அது குறித்து விரிவாக ஆராயப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

# மன்னார் வளைகுடா கடல் வழியாக பெருமளவில் போதைப் பொருள் கடத்தல்!

## போதைப் பொருள் தடுப்புப் பிரிவு தெரிவிப்பு

**மன்னார் வளைகுடா கடல் போதைவஸ்து கடத்தலுக்கு முக்கிய இடமாக உள்ளதாகவும் இதனுடன் முக்கிய அரசியல் பிரமுகர்களும் வர்த்தகர்களும் தொடர்புபட்டுள்ளதாக மாவட்ட போதைப் பொருள் தடுப்புப் பிரிவுக்குப் பொறுப்பான இன்ஸ்பெக்டர் விஜேசூரிய தெரிவித்துள்ளார்.**

தமிழ் நாட்டிலிருந்து மன்னார் வளைகுடா கடல் வழியாக போதைப் பொருட்கள் நாட்டுக்குள் கொண்டு வரப்படுகின்றன. கடத்தல்காரர்கள் மீனவர்களைப் போன்று நடமாடி இந்தக் கடத்தல் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளதாக விசாரணைகள் மூலம் தெரிய வருகின்றது.

போதைப் பொருள் கடத்தும் வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் அரசியல்வாதிகளாகவும், பிரபல்யம் பெற்ற வர்த்தகர்களாகவும் உள்ளனர். இதனால் நாளுக்கு நாள் போதைப் பொருள் பாவனை அதிகரித்து வருகின்றது.

தலைநகர் கொழும்பில் மாணவர்கள் மத்தியில் இதன் பழக்கத்தை ஏற்படுத்த பல வகையிலான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கூடுதலான இளைஞர்களே இதற்கு அடிமையாகி தமது வாழ்க்கையினை பாழாக்குகின்றனர்.

மன்னார் நகரம் கடத்தலுக்குப் பெயர்பெற்ற போதிலும் அதனைப் பாவிப்பவர்களுடைய தொகை குறைவாகவே உள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# சனாதிபதியின் அபிவிருத்தி லொத்தர் சபை பொறுப்பேற்பு சிக்கலிற்குரிய செயலல்ல

## ஊடகப் பேச்சாளர் கருத்து

அபிவிருத்தி லொத்தர் சபையை சனாதிபதிபொறுப்பேற்றுக்கொண்டமை சிக்கலுக்குரிய செயல் இல்லையென சபையின் புதிய பணிப்பாளரும் சனாதிபதியின் ஊடகப் பேச்சாளருமான ஹரீம் பீரிஸ் தெரிவிக்கின்றார்.

சனாதிபதியின் உத்தரவிற்கு எதிர்ப்பைத் தெரிவிக்கும் வகையில் அரசாங்க அச்சகத்தினுள் நிகழ்ந்த சம்பவமே சிக்கலுக்குரியதாக அமைந்ததாக அவர் சுட்டிக்காட்டுகின்றார்.

அபிவிருத்தி லொத்தர் சபையின் பணிப்பாளர்களில் ஒருவராக கடந்த 7ம் திகதி சனாதிபதியால்நியமிக்கப்பட்டஹரீம் பீரிஸ் கடந்த புதனன்று தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டார்.

அபிவிருத்தி லொத்தர் சபையைசனாதிபதி பொறுப்பேற்றதன் பின்னர் அவரின் பிரதிநிதியாக அந்த சபையின் நடவடிக்கைகளில் பங்குகொள்வது தமது முக்கிய கடமை என்று அவர் தெரிவித்துள்ளார்.

அபிவிருத்தி லொத்தர் சபையின் மூலம் சனாதிபதி நிதியத்துக்கு கிடைக்க வேண்டிய நிதியை முழுமையாகப் பெற்றுக் கொள்வது தனது நோக்கம் என்றும் குறிப்பிட்டார்.

# போலி நாணயத்தாள்களுடன் மோசடியாளர் மூவர் கைது

போலி நாணயத்தாள்கள் அச்சிடப்பட்ட மோசடி பற்றிய விபரங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. ஐநூறு ரூபா,நூறு ரூபா பெறுமதியான போலி நாணயத்தாள்களுடன் பானந்துறையில் கைது செய்யப்பட்ட சந்தேகநபரை விசாரித்தபோது போலி நாணயங்கள் அச்சிடப்பட்டமைக்கான விபரங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

சாதாரண நாயணயத்தாள்களில் காணப்படும் இலச்சினைகள் இந்தப் போலி நாணயத்தாள்களிலும் காணப்படுகிறது. இந்தப் போலி நாணயத்தாள்களை அச்சிடப்பயன்படுத்தப்பட்ட இயந்திரமும் மூன்று சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

# இலஞ்ச, ஊழல் முறைப்பாடுகள் வருடாந்த ரீதியில் அதிகரிப்பு!

(கொழும்பு)

பொதுமக்களின் ஒத்துழைப்பின்றி இலஞ்ச ஊழல்களைத் தடுக்க முடியாது என இலஞ்ச ஊழல் புலனாய்வு ஆணைக்குழு கூறுகின்றது.

தமக்குத் தேவையான விடயங்களை பணத்தைக் கொடுத்து நிறைவேற்றிக் கொள்ளும் நிலைமை பொது மக்களிடையே நீடிக்கின்றமை சிக்கல்களை ஏற்படுத்தியுள்ளதாக அந்த ஆணைக குழுவின் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

இலஞ்ச ஊழல் புலனாய்வுக் குழு ஆணைக்குழுவின் 2001ஆம் ஆண்டு அறிக்கையை சமர்ப்பித்து உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

2000ஆம் ஆண்டைவிட 2001 ஆம் ஆண்டு இலஞ்ச மற்றும் ஊழல் தொடர்பாக பொதுமக்கள் தெரிவித்த முறைப்பாடு அதிகரித்திருந்ததாகவும் அவர் கூறினார்.

# வாக்காளர் பட்டியலைத் திருத்த கால எல்லை நீடிப்பு

(கொழும்பு)

தேர்தல் வாக்காளர் பட்டியலைத் திருத்துவதற்கான கால எல்லை இம் மாதம் 30 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச,சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளர் மைத்திரி பால சிறிசேன, பாராளுமன்ற உறுப்பினர் நிமால் சிறி பால டி சில்வா ஆகியோர் தேர்தல் ஆணையாளர் தயானந்த திசாநாயக்கவைச் சந்தித்து அது தொடர்பாக விடுத்த கோரிக்கையின் பயனாக இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. வாக்காளர் பட்டியலைத்திருத் துவதற்காக அறிவிக்கப்பட்டிருந்த காலம் போதாது இருப்பதாகவும் எதிர்க்கட்சித்தலைவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# உல்லாசப் பயணிகளுக்காக புதிய விமான சேவை

(கொழும்பு)

சிறிலங்காவில் நீர்ப்பரப்புக்களில் இறக்குவதற்கு ஏற்ற வகையிலான புதிய விமான சேவை ஒன்றை நடத்துவதற்கு சிவில் போக்குவரத்து விமான சேவைப் பிரிவினர் அடுத்த அக்டோபர் மாதம முதல் ஆரம்பிக்கவுள்ளதாக அதன் நிறைவேற்றுப் பணிப்பாளர் நிமல்சிறி தெரிவித்திருக்கின்றார்.

இதற்கான அனுமதியைப் பெற நடவடிக்கை தற்போது மேற்கொள்ளப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. வெளிநாடுகளிலிருந்து இங்கு வரும் உல்லாசப் பயணிகளையும் வியாபார நோக்கில் வருவோரையும் கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து ஏற்றிக் கொண்டு உள்ளூர் நீர்ப் பரப்புக்களில் இறக்கி ஏற்றும் நடவடிக்கைகளில் மேற்படி சேவை நடைபெறும் எனவும் இதற்காக பாரிய நீர்ப்பிரதேசம் தேவைப்படமாட்டாது எனவும் முதலில் ஒரு விமானம் இதில் பயன்படுத்தப்படும் எனவும் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

# சமாதான நடவடிக்கை தாமதத்தால் கொழும்பு பங்குச்சந்தை வீழ்ச்சி

(கொழும்பு)

வடக்கு கிழக்கிற்கான இடைக்கால கட்டமைப்பு தொடர்பான விடுதலைப்புலிகள் தரப்பு பதில் இன்னமும் வெளியிடப்படாத நிலையில் இலங்கையின் பங்குச் சந்தையில் தொடர்ச்சியான வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

கொழும்பு பங்குச் சந்தையின் இன்றைய நிலவரப்படி அனைத்து தர நிறுவனங்களின் பங்கு விலையும் 0.38 வீத வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

விடுதலைப்புலிகளுக்கும் சிறிலங்கா அரசுக்கும் இடையே சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பமான காலப்பகுதியில் 30 விழுக்காடால் அதிகரித்த பங்குச் சந்தை தற்போது மந்தம் அடைந்திருப்பதாக பொருளியல் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

# 200 பாராளுமன்ற உறுப்பினர்களிடம் அனுமதிப்பத்திரமின்றி கைத்துப்பாக்கிகள்!

எவ்வித கட்டணங்களுமின்றி இலவசமாக அனுமதிப்பத்திரம் பெற ஏற்பாடு செய்திருந்தும் தற்போதுள்ள 225 பாராளுமன்ற அங்கத்தினருள் 200 பேர் அனுமதிப்பத்திரம் பெறாமல் "ரிவோல்வர்" துப்பாக்கிகளை பயன்படுத்துகின்றனா என குற்றம் சுமத்தப்படுகிறது.

கண்டி மாவட்ட பொ.ஐ.மு.எம்.பி. ஒருவரின் வாகனத்தில் இருந்து பாராளுமன்றவளவுக்குள் துப்பாக்கி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டதையடுத்து சபாநாயகரின் கோரிக்கைக்கேற்ப நடத்தப்பட்ட சோதனை நடவடிக்கைகளின் விளைவாக மேற்படி தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

இலவச அனுமதிப்பத்திரம் வழங்க அரசு முன்வந்திருக்கும் நிலையில் இவ்வாறு அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளாதிருப்பது வருந்தத் தக்க விடயமாகும் எனவும் இவர்களுக்கு அனுமதிப்பத்திரம் வழங்குவதற்காக நடமாடும் செயலகம் ஒன்றை ஏற்படுத்துமாறும் உள்துறை அமைச்சை கேட்டுள்ளதாகவும் சபாநாயகர் தெரிவித்துள்ளார்.

மேலும், கடந்த காலங்களில் ஏற்பட்ட தேர்தல் வன்முறைகளும் வேறு வன்முறைகளும் நடைபெறுவதற்கு மேற்படி துப்பாக்கிகள் பயன்பட்டிருக்கலாம் எனவும் கருதும் சபாநாயகர் அது பற்றி விசாரணை மேற்கொள்ளப்படும் எனவும் கூறியுள்ளார்.

## ரூபவாஹினி பணிப்பாளருக்கு

# சேவை நீடிப்பு வழங்காமைக்கு 4 வருட சம்பளம் வழங்கப் பணிப்பு

(கொழும்பு)

முன்னாள் ரூபவாஹினி கூட்டுத்தாபனப் பணிப்பாளருக்கு சேவை நீடிப்பு வழங்காததால் அவருக்கு நட்டஈடாக 4 வருடசம்பளம் வழங்க நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

அவர் 55 வயதை அடைந்திருப்பினும் கூட்டுத்தாபன சட்டவிதிகளுக்கமைய 60 வயது வரை அவர் சேவையாற்ற முடியும். எனினும், அவரின் சேவையை மட்டுப்படுத்தும் வகையில் இரண்டாவது சேவை நீடிப்பை வழங்க கொழும்பு தொழில் நியதிச்சபை மறுத்துள்ளது.

இது தொடர்பாக பாதிக்கப்பட்டவரான லூஷன் புனத்சிங்கள தொழில் நீதிமன்றுக்கு மேன்முறையீடு செய்ததையடுத்து மேற்படி 4 வருடங்களுக்கான வேதனத்தை வழங்கத் தீர்ப்பளித்துள்ளது.

# பேருந்துகளைத் திருத்த நிதி ஒதுக்கீடு

(கொழும்பு)

சேவையில் ஈடுபடமுடியாத நிலையில் பழுதடைந்த நிலையில் உள்ள கொத்தனி நிறுவனங்களுக்குச் சொந்தமான பேருந்துகளை திருத்தி அமைக்க நூறு மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக சிறிலங்கா போக்குவரத்து அமைச்சர் திலக் மாரப்பன தெரிவித்துள்ளார். நாடு முழுவதும் சுமார் ஆயிரத்துக்கு மேற்பட்ட பேருந்துகள் சேவையில் ஈடுபட முடியாத நிலையில் உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.


# அறிவித்தல்

## தமிழீழ வைப்பகம்

தமிழீழ வைப்பகத்தின் எக்கிளையிலாவது 01.07.2000 தொடக்கம் 30.09. 2001வரை அடைவுக்கடன் பெற்று உரிய காலத்தில் அவற்றை மீளச் செலுத்தத் தவறிய கடனாளிகளின் அடைவு நகைகளைத் தமிழீழ வைப்பகம் விற்பனை செய்யத் தீர்மானித்துள்ளது. எனவே உரியவர்கள் 08.08.2003 ஆம் நாளுக்கு முன்னர் அடைவு நகைகளை மீட்டுக்கொள்ளுமாறு அல்லது புதுப்பித்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

மேலாளர்,
ஆளுமைப்பகுதி,
நடுவப்பணியகம்,
தமிழீழ வைப்பகம்.

(சி-8446)



**சிந்தனைக்கு**

சுதந்திர எழுச்சியின் உந்துதலால் தான் மனித வரலாற்றுச் சக்கரம் சுழல்கின்றது.

தமிழீழத்தேசியத் தலைவர்

ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 03-08-2003

# ஜே.வி.பி.யின் அவலம்!

ஜே.வி.பி.யின் ஆரம்ப கர்த்தாவும், அதன் முன்னாள் தலைவருமான ரோகண விஜயவீரவை ஒரு கொலைகாரன் என அநுரா பண்டாரநாயக்க செவ்வி ஒன்றில் கூறியுள்ளதை அடுத்து இக்கூற்றை அநுரா பண்டாரநாயக்க உடனடியாக மீளப்பெறவேண்டும் என ஜே.வி.பி. விடுத்துள்ள கோரிக்கையானது, அக்கட்சியின் வங்குரோத்துத் தனத்தையே வெளிப்படுத்துவதாய் உள்ளது.

அநுரா பண்டாரநாயக்க கூறியதை ஜே.வி.பி பாரதூரமானதொரு விடயமாகக் கருதுவதாக இருந்தால், அக்கட்சியானது முதலில் அநுரா பண்டாரநாயக்கவின் கூற்றிற்குப் பலத்த கண்டனத்தைத் தெரிவிப்பதோடு அநுரா பண்டாரநாயக்க தரப்போடு தமக்குள்ள தொடர்புகளைத் துண்டித்துக்கொள்ள வேண்டும். அதாவது, சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடனான தொடர்புகளை உடன் துண்டித்துக்கொண்டிருத்தல் வேண்டும்.

ஆனால், ஜே.வி.பி.யோ அநுரா பண்டாரநாயக்க வார்த்தைகளை மீளப்பெறுதல் வேண்டும் எனக் கோரிக்கை விடுப்பதுடன் நின்றுகொண்டுவிட்டது. ஆனால், இது ஜே.வி.பி. தமது தலைவருக்குக் காட்டும் விசுவாசமாகவோ அன்றி நன்றிக்கடனாகவோ இருக்கமாட்டாது. ஏனெனில், கூறிய வார்த்தைகளை மீளப் பெறுவதினால் கூறப்பட்டவை மறைந்துவிடப் போவதில்லை. அது மாத்திரமல்ல, மீளப்பெறுதல் என்பது மீளவும் ஒரு தடவை ஞாபகப்படுத்துவதாகவே இருக்கும்.

அநுரா பண்டாரநாயக்க ஜே.வி.பி.யின் முன்னாள் தலைவர் பற்றி அரசியற்சூழ்நிலை குறித்து யோசித்துப் பேசாதுவிட்டாலும் தனது மனதில் உள்ளதைக் கூறிவிட்டார் என்றே கொள்ளலாம். ஆகையினால், அவர் தனது கூற்றுக்களை மீளப் பெறுவதினால் அவர் மனதில் உள்ளதை மீளப்பெறப்பட்டது ஆகிவிடுமா? அன்றி ஏற்கனவே அவர் கூறியது மறைந்துதான்போய்விடுமா?

ஆனால், ஜே.வி.பி.யோ அநுரா பண்டாரநாயக்க கூறியதை வாபஸ் பெறவேண்டும் எனக் கோரிக்கை முன்வைத்துள்ளமையானது அதன் இயலாத்தனத்தின் வெளிப்பாடாகவே கொள்ளத்தக்கதாகும். அதாவது, அநுரா பண்டாரநாயக்கவுடனோ அவருடன் சார்ந்த கட்சியுடனோ உறவை முறித்துக் கொள்ள ஜே.வி.பி. விரும்பவில்லை அன்றி இயலாது உள்ளது என்றே அர்த்தம் கொள்ள வேண்டியுள்ளது.

ஜே.வி.பி.யும் சரி, அதனுடன் அரசியற்கூட்டணி ஒன்றை ஏற்படுத்த முனையும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் சரி, இன்று ஒன்றை ஒன்று நம்பியே அரசியல் நடத்த முற்பட்டு நிற்கின்றன. ஜே.வி.பி.யுடன் ஒரு இணக்கப்பாட்டிற்கு வராதுபோனால் இனி ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுதல் என்பது பகற்கனவாகவே இருக்கும் என்பது சுதந்திரக் கட்சிக்கு நன்கே தெரியும். அதேபோன்று சு. கட்சியுடன் கூட்டணி ஒன்றிற்கு வராதுபோனால் அரசியலில் தமது நிலை இதற்கு அப்பால் முன்னேற்றம் காணமாட்டாது என்பது ஜே.வி.பி.க்கும் தெரியும்.

இந்நிலையில், பல முரண்பாடுகளையும் கடந்து ஜே.வி.பி.யும் – சுதந்திரக் கட்சியும் தொடர்ந்து பேச்சுவார்த்தைகளை நடத்திக் கொண்டிருக்கின்றன. இரு கட்சிகளும் இறுதி உடன்பாட்டை இதுவரையில் எட்டவில்லையாயினும், இணக்கப்பாட்டிற்கு வரக் கூடிய சாத்தியக் கூறுகள் நிரம்பவே இருப்பதாக அரசியல் நோக்கர்கள் மத்தியில் அபிப்பிராயம் உண்டு.

ஆகையினால், இவ்விருதரப்பும் ஒரு பொருத்தமான அரசியற் சூழ்நிலைக்காகக் காத்துக் கொண்டிருப்பதாக அரசியல் விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர். இவ்வாறு இருந்தும் அநுரா பண்டாரநாயக்க எதிர்பாராத வேளையில் ரோகண விஜயவீர குறித்து இத்தகையதொரு அபிப்பிராயத்தை வெளியிட்டு குழப்பத்தைத் தோற்றுவித்துள்ளார்.

பொதுவாக அநுரா பண்டாரநாயக்கவின் கூற்றுக்கள் அரசியல் வட்டாரத்தில் பெரும் பாதிப்புக்களை விளைவிப்பதில்லை. ஏனெனில், அவருக்கு அவரது கட்சிக்குள்ளும் வெளியிலும் அத்தகையதொரு செல்வாக்கே உண்டு. ஆயினும் ஜே.வி.பி.யின் முன்னாள் தலைவர் பற்றிய கூற்று ஜே.வி.பி.க்குத் தர்மசங்கடத்தைத் தோற்றுவித்திருப்பது புரிந்துகொள்ள முடியாததொன்றல்ல.

ஆனால், அதற்காக சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் கூட்டுச் சேர்ந்து அதிகாரத்தைஅனுபவிக்கத் தயாராகிக் கொண்டிருக்கும் ஜே.வி.பி, அநுரா மீதோ சிறிலங்கா சுதந்திரக் கட்சி மீதோ தனது சீற்றத்தை வெளிப்படுத்துவதோடு, உறவையும் முறித்துக் கொள்ளும் என எதிர்பார்க்க இயலாது. ஏனெனில், தனது கணவனையே கொன்ற ஜே.வி.பி.யுடன் சனாதிபதி விட்டுக்கொடுப்புடன் கூட்டணிக்கான பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கையில், தமது தலைவர் பற்றிய விமர்சனம் ஒன்றிற்காக ஜே.வி.பி. பேச்சுக்களை முறித்துக்கொள்ளும் என எவ்வாறு எதிர்பார்க்க முடியும்? மறைந்த தலைவருக்காக அதிகார சுவையை இழக்கத்தான் வேண்டுமா?

# எங்களது பிரச்சினையை நாமே தீர்ப்போம்

# நோர்வே தலையிடுவதை விடுத்து வெளியேறுக

## - நோர்வே பௌத்த குழுவிடம் சிஹல உறுமய

(கொழும்பு)

"எமது பிரச்சினையை நாம் தீர்ப்போம். நாட்டின் நற்பெயரைக் காப்பாற்றிக்கொள்ள இந் நாட்டை விட்டு வெளியேறுக" என சிஹல உறுமய கட்சியின் பிரச்சார செயலர் உதய கம்மன்பில நோர்வே பௌத்த தூதுக்குழுவிடம் வலியுறுத்தியுள்ளார்.

சிறிலங்காவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள மேற்படி தூதுக்குழு சிஹல உறுமய காரியாலயத்தில் அவர்களைச் சந்திக்க வந்தபோது கம்மன்பில மேற்கண்டவாறு கேட்டுள்ளார்.

சிங்கள பௌத்தர்களிடையே நோர்வே மக்கள் காணும் மிலேச்சத்தன்மையை நீக்கும் பொருட்டே வருகை தந்துள்ளதாக நோர்வே பௌத்த தூதுக்குழு தெரிவித்துள்ளது.

இதன்போது சிஹல உறுமய தலைவர் கூறியதாவது, பௌத்தத்தின் இதயமாக விளங்கும் சிறிலங்காவை அவர்களிடம் இருந்து புலிகள் பறிக்க முயல்வதாகவும் அதற்கு நோர்வே அரசு ஒத்துழைப்பு வழங்குவதாகவும் தூதுக்குழுமுன் தெரிவித்துள்ளனர்.

# ரயில்வேத் திணைக்களம் தனியார்மயம்; அரசின் முயற்சிக்கு எதிராகப் போராட்டம்

(கொழும்பு)

ரயில்வேத் திணைக்களத்தை அதிகார சபையாகமாற்றி தனியாரிடம் ஒப்படைக்க அரசு தீர்மானித்துள்ளதை எதிர்த்து நாடுபூராவும் ஆர்ப்பாட்டம் நடத்துவதற்கு எதிர்க் கட்சிகளும் ரயில்வே தொழிற்சங்கமும் தீர்மானித்துள்ளன. அண்மையில எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்சவின் தலைமையில் நடைபெற்ற தொழிற்சங்கங்களின் கூட்டத்தின் போது மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதன் முதற்கட்டமாக எதிர்வரும் 6ஆம் திகதி பாராளுமன்றில் கேள்வி எழுப்புவதுடன் விவாதம் ஒன்றுக்கும் அனுமதி கோரப்பட்டுள்ளது என ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

ரயில்வே திணைக்களத்தை அதிகாரசபையாக மாற்றி அதனை தனியாருக்கு விற்பனை செய்யவுள்ள அரசின் செயற்பாட்டால் பல ஊழியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றி ஆராய குழு ஒன்று நியமிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கும் போது;

இது தொடர்பாக 6ஆம் திகதி நடைபெறவுள்ள விவாதத்தின்போது பொ.ஐ.மு., ஜே.வி.பி. எம்.பி.க்களை விட தமிழ் தேசிய கூட்டமைப்பு, புளொட், ஈ.பி.டி.பி. எம்.பி.க்களின் ஆதரவைப் பெறவும் நடவடிக்கை எடுக்கப் படவுள்ள்தாகத் தெரிவித்துள்ளார்.

# சட்டவிரோதக் குடியேறிகளை இத்தாலி அனுப்புபவர் கைது

(கொழும்பு)

சட்டவிரோதமாக பொதுமக்களை இத்தாலிக்கு அனுப்பிய முக்கிய புள்ளி ஒருவரை இரகசியப் பொலிசார்கைது செய்துள்ளனர். இவரை எதிர்வரும் 8ஆம் திகதிவரை காவலில் வைக்குமாறு கொழும்பு நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளவர் கப்பல் உரிமையாளரான முனசிங்க என்பவராவார். இத்தாலி நாட்டிலிருந்து இங்கு நாடு கடத்தப்பட்ட 8 பேரிடம் கிடைக்கப் பெற்ற தகவல்களின்படி இரகசியப் பொலிசார் நடத்திய விசாரணைகளின் போது மேற்படி சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டார்.

இவரிடம் பெறப்பட்ட வாக்குமூலத்தின்படி 2001ஆம் ஆண்டு "மெக்னட்ஸ்டார்" என்ற கப்பலில் பேருவளைக் கரையிலிருந்து 371பேரை இத்தாலிக்கு அனுப்பியதாகவும் பின்னர் அக்கப்பலை விலைக்கு வாங்கி இந்த வியாபாரத்தை தொடங்கியதாகவும் தெரிவித்துள்ளார். இதன்மூலம் அவருக்கு 100 லட்சம் கிடைத்திருப்பதாகவும் பொலிசாரிடம் தெரிவித்துள்ளார். மேலும் அவர் தெரிவிக்கையில் கப்பலின் பெயரை "அற்புத இயந்திரம் என மாற்றிப் பலரை கப்பல் கப்டன்களாகவும் சிப்பந்திகளாகவும் நியமித்ததை ஒப்புக் கொண்டுள்ளார்.

# சுங்கப் பகுதியில் நிதி மோசடி

(கொழும்பு)

சுங்கத் திணைக்கள செயற்குழுவினருக்கு மாதாந்தம் வழங்கப்படும் வேதனத்தைவிட, கஸ்டப்படி, வெளிக்கள சோதனைகளுக்கானபடி, வெகுமதிகள் மேலதிகநேரக் கொடுப்பனவு என்ற வகையில் 2001ஆம் ஆண்டு 681கோடி ரூபா வழங்கப்பட்டுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இங்கு கடமை புரியும் 2 ஆயிரத்து இருநூறு ஊழியர்களில் பதினைந்து அதிகாரிகளுக்கு 10 லட்சம் ரூபா வருடம் ஒன்றுக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் பணிப்பாளர் ஒருவர் 48லட்சம் ரூபாவையும் உதவிப் பணிப்பாளர்கள் இருவர் தலா 35லட்சம் ரூபாவையும் ஒரு வருடக் கொடுப்பனவாகப் பெற்றுள்ளமை தெரியவந்துள்ளது.

# வடக்கு கிழக்கைப் பிரிக்க பிரேரணை கொண்டுவரின் அதனை ஆதரிப்போம்

## அதாவுல்லா குழு அறிவிப்பு

வடக்கு-கிழக்கு மாகாணங்களைப் பிரிக்க பிரேரணை கொண்டுவந்தால் அதற்கு ஆதரவாக தமது அணியினர் வாக்களிப்பதாக பெருந்தெருக்கள் அமைச்சர் அதாவுல்லா பத்திரிகைக்கு பேட்டிஅளித்துள்ளார்.

நாட்டில் சமாதானம் ஏற்பட வேண்டும் என்பதை தான் ஏற்றுக் கொள்வதாகவும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும்போது ஏனைய இனங்களைப் பாதிக்காமல் இருக்க வேண்டும் என விரும்புவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். வடக்கு-கிழக்கு பிரிக்கப்படுவதற்கு அனைவரும் பேதமின்றி ஒத்துழைப்பு வழங்கவேண்டும் எனவும் கேட்டுள்ளார்.

கிழக்கு மாகாணத்தைப் பாதுகாக்கும் அமைப்பை உருவாக்கியுள்ளதுடன் அதாவுல்லாவே அதன் தலைவராகவும் இருக்கிறார்.

# தென்னாபிரிக்க வீரர் சாதனை

தென்னாபிரிக்க அணித் தலைவர் கிரேம்ஸ்மித் அந்த நாட்டின் கிரிக்கெட் வரலாற்றில் ஆயிரம் ஓட்டங்களை விரைவாகப் பெற்று சாதனை நிலை நாட்டியுள்ளார் தனது 17 ஆவது டெஸ்டிலேயே ஸ்மித ஆயிரம் ஓட்டங்களைத் தாண்டி சாதனை புரிந்துள்ளார்.

இதற்குமுன் தென்னாபிரிக்க வீரர் எடி பார்லோவ் 21டெஸ்டில் ஆயிரம் ஓட்டங்களைத் தாண்டியமையே சாதனையாகக் காணப்பட்டது.

# முதலிடத்தில் பிரேசில் அணி

சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனம் வெளியிட்டுள்ள உதைபந்தாட்ட நாடுகளின் தரவரிசைப் பட்டியலில் உலக சம்பியனான பிரேசில் அணி 848 புள்ளிகளுடன் தொடர்ந்து முதலிடத்தில் உள்ளது.

பிரேசிலைத் தொடர்ந்து 842 புள்ளிகளுடன் பிரான்ஸ் இரண்டாமிடத்திலும், 755 புள்ளிகளுடன் ஸ்பெயின் மூன்றாமிடத்திலும் உள்ளன.

4 தொடக்கம் 10 வரையான இடங்களை முறையே ஹொலன்ட், மெக்ஸிக்கோ, ஆர்ஜென்டினா, துருக்கி, ஜேர்மனி, அமெரிக்கா, இங்கிலாந்து ஆகிய அணிகள் கைப்பற்றியுள்ளன.

# முன்னேற்றப்பாதையில் முரளி

உலகில் இதுவரை நடைபெற்ற டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் 887 புள்ளிகளைப் பெற்று மேற்கிந்தியத் தீவு அணியின் துடுப்பாட்டவீரர்பிரைன் லாரா முதலாவது இடத்தைப் பெற்றுள்ளதாக "பிரைஸ்வாட்டர் ஹவுஸ் கூப்பர்ஸ்" என்ற முதல்தர தரவரிசைப்படுத்தும் நிறுவனம் கருத்து வெளியிட்டுள்ளது.

அடுத்ததாக 872 புள்ளிகளைப் பெற்ற தென்னாபிரிக்க அணியின் பந்து வீச்சாளர் வரிசையில் ஷேன் பொலக் முதலாவது இடத்திலும் உள்ளார்.

சிறிலங்கா அணி துடுப்பாட்ட வீரர்களுக்கு எந்த இடமும் கிடைக்கா நிலையில் பந்துவீச்சில் முத்தையா முரளிதரனுக்கு ஒருநாள் போட்டிகளில் முதலாவது இடமும் டெஸ்ட் போட்டிகளில் இரண்டாவது இடமும் கிடைக்கப்பெற்றுள்ளன.

இதேவேளை சிறிலங்கா அணியின் துடுப்பாட்ட வீரர்கள் எவரும் சிறந்த துடுப்பாட்ட வரிசையில் 10 இடங்களுக்குள்ளும் அடங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.



# இறுதித் தீர்வைவிட இடைக்காலசபையிலேயே புலிகள் அதிக அக்கறை கொண்டுள்ளனர்

## லக்ஷ்மன் கதிர்காமர் கூறுகிறார்

இறுதித் தீர்வைவிட இடைக்கால நிர்வாக சபையிலேயே புலிகள் அதிக அக்கறை கொண்டிருப்பதாகச் சனாதிபதியின் வெளிவிவகார ஆலோசகரும் நாடாளுமன்ற உறுப்பினருமான லக்ஷ்மன் கதிர்காமர் கூறியுள்ளார்.

அரசு முன்வைத்துள்ள இடைக்கால நிர்வாக சபை யோசனையில் இடைக்கால சபையின் ஆயுட்காலம் நிர்ணயிக்கப்படவில்லையென அவர் குறை கூறியுள்ளார். இனப்பிரச்சினைக்கான இறுதித் தீர்வு குறித்து இரு தரப்பினரிடையே பொது இணக்கம் ஏற்பட்ட பின்னர் இடைக்கால நிர்வாக சபை வழங்கப்பட்டால் அதனைத் தாம் எதிர்க்கமாட்டோம் என அவர் மேலும் கூறியுள்ளார்.

அத்துடன் புலிகளும்-அரசும் செய்துள்ள புரிந்துணர்வு உடன்படிக்கையில் பல குறைபாடுகள் இருப்பதாக அவர் மேலும் சுட்டிக் காட்டியுள்ளார்.


இதேவேளை, இடைக்கால நிர்வாக சபைத் திட்டவரைவை லக்ஷ்மன் கதிர்காமர் தலைமையிலான பொ.ஐ.முன்னணியின் சட்டவல்லுனர் குழு ஆராய்ந்து வருகின்றது.

அரசினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள திட்டத்திலுள்ள குறைபாடுகள் மற்றும் விடயங்கள் குறித்து ஆராய்ந்து இக்குழு சனாதிபதிக்கு ஆலோசனைகளைச் சமர்ப்பிக்கவுள்ளதாகத் தெரியவருகிறது.

# லக்ஷ்மன் கதிர்காமர் இந்தியாவுக்கு விஜயம்

பொதுசன ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினரும் சனாதிபதியின் வெளிவிவகார ஆலோசகருமான லக்ஷ்மன் கதிர்காமர் அடுத்தவாரம் இந்தியாவிற்கு விஜயம் செய்யவுள்ளார்.

இந்து பத்திரிகையின் முன்னாள் ஆசிரியரின் நினைவுதின கருத்தரங்கில் உரையாற்றுவதற்காகவே அவர் விஜயம் செய்யவுள்ளதாகத் தெரியவருகிறது. இதன் போது அவர் இந்திய வெளியுறவு அமைச்சர் உட்பட பல அமைச்சர்களின் அதிகாரிகளைச் சந்தித்துப் பேசவுள்ளதாகத் தெரியவருகிறது.



ரஷ்யாவில் இராணுவ ஆஸ்பத்திரி ஒன்றில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலையடுத்து மீட்பு வேலைகள் இடம்பெறுகின்றன.

(செய்தி 3ஆம் பக்கத்தில்)

### -யாழ். வடமராட்சியில் -

# மூன்று தினங்கள் தேடப்பட்ட வயோதிபப்பெண் சடலமாக மீட்பு

மூன்று தினங்களாகக் காணாமல் போன பெண்ஒருவர்தோட்டக்கிணறு ஒன்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கரவெட்டி சரஸ்வதி வித்தியாலய வீதியைச் சேர்ந்த வேலுப்பிள்ளை சரஸ்வதி (வயது 75) என்பவரே நெல்லியடி வடலிச் சந்தைத் தோட்டக்கிணறு ஒன்றிலிருந்து நேற்று முன்தினம் சடலமாக மீட்கப்பட்டார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் காணாமற்போன இவரைத் தேடும் முயற்சியில் இவரது உறவினர்கள் ஈடுபட்டபோதிலும் கண்டு பிடிக்க முடியவில்லை. கிணறு ஒன்றில் சடலம் ஒன்று இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டதை அடுத்து அங்கு சென்று பார்வையிட்டபோது சடலமாக இவர் மீட்கப்பட்டார்.

சடலத்தை பொலிசார் முன்னிலையில் கிணற்றில் இறங்கி மீட்க முற்பட்டவேளை வயோதிபப்பெண் அணிந்திருந்த ஆடையினுள் இருந்து இரு நாகபாம்புகள் சீறிப் பாய்ந்தன. இரு பாம்புகளையும் கிணற்றினுள் அடித்துக்கொன்ற பின்பே சடலம் மீட்கப்பட்டது.

### -யாழ். சாவகச்சேரிப்பகுதியில்-

# சக பெண் சிப்பாயை அடித்துக்கொன்ற பெண்சிப்பாய் மீது இராணுவ விசாரணை

சாவகச்சேரிப் பகுதியில் கடந்த 2001ஆம் ஆண்டு ஒன்பதாம் மாதமளவில் பெண்படைச் சிப்பாய்ஒருவர் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டு யாழ். சிறையில் வைக்கப்பட்டுள்ள சக பெண் சிப்பாய் ஒருவரை இராணுவ விசாரணைகளுக்காக படைத்தரப்பு நேற்றுக்கையேற்றுள்ளது.

அளவுக்கதிகமான மலேரியாக் குளிசைகளை உட்கொண்டதாகத் தெரிவித்து மேற்படி படைச்சிப்பாய் உயிரிழந்ததாக நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆயினும் மேற்படி படைச்சிப்பாய் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பிரேதப்பரிசோதனையின்போது அவர் அடித்துக் கொல்லப்பட்டதற்கான தடயங்களும், விலா எலும்பு உடைந்தநிலையில் இருந்தமையும் கண்டு பிடிக்கப்பட்டதை அடுத்து சந்தேகத்தின் பேரில் அவருடன் கடமையிலிருந்த படை பெண்உயர் அதிகாரி ஒருவர் உள்ளிட்ட பதின்மூன்று பெண் படையினர் கைது செய்யப்பட்டிருந்தனர்.

எனினும் இவர்கள் யாழ். மேல் நீதிமன்றால் பிணையில் விடுவிக்கப்பட்டார்கள். இவர்களில் ஒருவரான மின்மினிஜெயசிங்கா என்பவர் குறித்த தவணைகளின்போது நீதிமன்றில் சமுகமளிக்காததுடன் போலியான மருத்துவச்சான்றுகளைச் சமர்ப்பித்ததனை அடுத்து சிறிலங்கா இராணுவத் தரப்பு அவருக்கு வழங்கியிருந்த பிணையை வாபஸ்பெற்றிருந்தது இந்த நிலையில் சாவகச்சேரி நீதிமன்றால் அவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார். இந்த நிலையில் மேற்படி படைப்பிரிவின் லெப்ரினன் கேணல் அதிகாரியான திஸநாயக்காவினால் மேற்படி பெண் சிப்பாய மீது ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்வதற்கான உள்ளக விசாரணை ஒன்று படைத்தரப்பினால் மேற்கொள்ளப்பட இருப்பதாகத் தெரிவித்து 20 நாட்களுக்கு இராணுவத்திடம் கையளிக்குமாறு சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று முன்தினம் விண்ணப்பித்ததற்கு அமைய அப்பெண் சிப்பாயை படையதிகாரியிடம்ஒப்படைக்க உத்தரவிட்ட சாவகச்சேரி நீதவான் பிறேம் சங்கர் இவ்வுள்ளகவிசாரணைகள் தொடர்பான பூர்வாங்க அறிக்கையை நீதி மன்றில் சமர்ப்பிக்க வேண்டும் எனவும் உத்தரவிட்டுள்ளார். (27)

# அல்லைப்பிட்டி-குறிகட்டுவான் வீதியில் கடற்படையினர் தீவிர ரோந்து

(யாழ்ப்பாணம்)

அல்லைப்பிட்டி கடற்படைச் சோதனைச் சாவடியிலிருந்து, வேலணை, குறிகட்டுவான் பகுதிவரை இராணுவத்தினர் கடந்த சில நாட்களாகத் தீவிர ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவ்வீதிவழியாக மிதிவண்டிகளிலும் இராணுவ உந்துருளிகளிலும் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபடும் இவர்கள் வீதியில் செல்லும் இளம் வயதினரை மறித்து தேசிய அடையாள அட்டை,இராணுவத்தினரால் வழங்கப்பட்ட விசேட அடையாள அட்டை என்பவற்றைப் பரிசோதித்து வருகின்றனர்.

அடையாள அட்டையில் தீவகப் பகுதி முகவரி இல்லாவிடின் தீவகத்துக்கு வந்ததன் காரணம், தற்போது தங்கியுள்ள முகவரி என்பனவற்றையும் படையினர் விசாரித்து வருகின்றனர்.அத்துடன்அடையாள அட்டைகளையும் பதிவு செய்கின்றனர்.

வன்னியில் இருந்து சமாதான நடவடிக்கையால் மீளக் குடியமர்ந்த மக்களிடம் இராணுவ அடையாள அட்டை இல்லாமையால் இவர்கள் வீதியில் நடமாடுவதற்கு மிகவும் கஷ்டப்படுகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (33)

### தேசியத்..

போராளிகளையும், மக்களையும் நேரடியாகப் பார்க்க வேண்டும் என்ற பெரிய அவா இருந்தது. அதுவும் இந்த யுத்தநிறுத்த உடன்படிக்கை ஏற்பட்ட பின்னர் பலத்த எதிர்பார்ப்பு என் மனதில் இருந்தது. எமது தலைவருடைய திட்டங்கள், எண்ணங்கள், அவருடைய வழிகாட்டல்கள் தென்தமிழீழத்தில் செயலுருப் பெற்றுத் திகழ்வதைப் பார்க்கும் போது பெரு மகிழ்ச்சியாக இருக்கின்றது. எமது தேசியத் தலைவர்தமிழீழப்பிரதேசத்தில் குறிப்பாகத் தென்தமிழீழப் பிரதேசத்துக்கு வருகை தருகின்ற காலம் எமக்கு எம்முடைய வாழ்வை, எம்முடைய இறைமையைஉறுதிசெய்யும் காலமாக விரைவில் அமையும் என்று தெரிவித்தார்.

கனடா தமிழர் புனர்வாழ்வுக் கழக நிதியுதவியுடன், தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மூதூர் சேனையூரில் அமைக்கப்பட்ட இலவசக் கணினிப் பயிற்சி நிலையத்தைத் அரசியல்துறைப் பொறுப்பாளர் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார். இக் கணினிப் பயிற்சி நிலையத்தின் பெயர்ப்பலகையை விடுதலைப் புலிகளின் திருமலை மாவட்டக் கட்டளைத் தளபதி கேணல் பதுமன் திரைநீக்கம் செய்துவைத்துள்ளார். தமிழீழத் தேசியக் கொடியை விடுதலைப்புலிகளின் திருமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் திலக் ஏற்றிவைத்தார்.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத் திருமலை மூதூர் பகுதி இணைப்பாளர் எஸ்கோபால் வரவேற்புரை நிகழ்த்தினார். திருமலைப் பாராளுமன்ற உறுப்பினர் க.துரைரத்தினசிங்கம் ஆகியோரும் உரை நிகழ்த்தினர்.

இந்த நிகழ்வில் சிறப்புரையை அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் நிகழ்த்தினார். (25)

### யாழ். மாவட்ட...

கூறியுள்ளனர்.

இதனைக்கருத்திலெடுத்த விடுதலைப்புலிகளின் யாழ்மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இம் மீனவர்கள் தமது குறைகள் தொடர்பாக யாழ். அரச அதிபரைச் சந்தித்து கலந்துரையாட ஏற்பாடு செய்வதென உறுதியளித்துள்ளார். (33)

### சிங்களப்...

குறிகட்டுவான் இறங்குதுறையிலிருந்து 100 மீற்றர் தொலைவில் இடம்பெற்ற இச்சம்பவத்தின் போது அருகில் இருந்த படகுகளின் உதவியுடன் கடலில் விழுந்தவர்கள் எந்த வித உயிராபத்துமின்றி மீட்கப்பட்டுள்ளார்கள். இப்படகில் இருந்தவர்களில் பெருமளவானோர் சிங்கள உல்லாசப் பயணிகள் என்பது குறிப்பிடத்தக்கது. (33)

### மீசாலையில்..

இத்தாவில் பளைப்பகுதியைச் சேர்ந்த அ.புண்ணியமூர்த்தி (வயது-45) என்பவரும் அதே இடத்தைச் சேர்ந்த ரி.பாலநாதன் (வயது 40) என்பவரும் மிகவும் கடுமையாகக் காயப்பட்டு மயக்கநிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.(33)

# வன்னிக்கு நிதிஒதுக்கீடு

(வவுனியா செய்தியாளர்)

வன்னி மாவட்டத்திற்குரிய 2003 ஆம் ஆண்டிற்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வன்னி மாவட்டத்திற்கு பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் 30 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் வவுனியா மாவட்டத்திற்கு 13.3 மில்லியன் ரூபாவும், மன்னார் மாவட்டத்திற்கு 10.3 மில்லியன் ரூபாவும், முல்லைத்தீவு மாவட்டத்திற்கு 3.9 மில்லியன் ரூபாவும், வன்னியில் இருந்து இடம்பெயர்ந்த முஸ்லிம்கள் வாழும் பிறமாவட்டங்களுக்கு 2.5 மில்லியன் ரூபாவாக 30 மில்லியன் ரூபா வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (10)

### தமிழீழக்...

ளாற்றில் புதிய காவல்பணிமனை நிறுவப்பட்டு அங்கு அவர்கள் பணியாற்றவுள்ளனர் எனவும் தமிழீழக் காவல்துறையினரின் மட்டக்களப்பு அம்பாறை மேலாளர் கங்கையழகன் தெரிவித்துள்ளார்.

### பொ.ஐ.மு.வின்..

இதனிடையே சமாதானமுயற்சிகளை ஊக்குவிப்பதற்கு புலிகள் பயணம் செய்ய உலங்குவானூர்தியை அரசு வழங்குவதில் எவ்வித தவறும் இல்லையென அவர்கள் மேலும் கூறியுள்ளனர்.

# இடைக்கால நிர்வாகம் குறித்து மக்கள் அச்சம்கொள்ளத் தேவையில்லை

## தென்பகுதி மக்களுக்கு லால் விஜயநாயக்க தெரிவிப்பு

வட- கிழக்கிற்கென இடைக்கால நிர்வாக அமைப்பை ஏற்படுத்திக் கொள்வது தொடர்பாக தென்பகுதி மக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லையென லங்கா சமசமாஜக் கட்சியின் அரசியல்சபை உறுப்பினர் லால் விஜயநாயக்க கூறியுள்ளார்.

இடைக்கால நிர்வாக சபைக்கான யோசனை புதியதொன்றல்ல எனக் கூறிய அவர் 1987 ஆம் ஆண்டிலிருந்து இவ் யோசனை முன்வைக்கப்படுகிறது எனக் கூறியுள்ளார்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் நிகழ்வொன்றில் நேற்று உரையாற்றும் போதே அவர் இதனைக்கூறியுள்ளார்.

புலிகளை வட-கிழக்கின் நிர்வாகத்தில்பங்குகொள்ளச்செய்வதில் இத்திட்டம் முக்கிய பங்கை வகிக்கிறது என அவர் மேலும் கூறியுள்ளார். இடைக்கால நிர்வாகத்தை ஏற்படுத்துவதற்கு நிறைவேற்று அதிகாரத்தினதும் பாராளுமன்றத்தினதும் இணக்கம் அவசியமாகுமென அவர் கூறியுள்ளார்.

# ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் முழுமையாக அரசியல் மயமாகியது

## பொ.ஐ.மு.பா.உ.மங்கள சமரவீர குற்றச்சாட்டு

ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் முற்றுமுழுதாக அரசியல் மயப்படுத்தியிருப்பதாகப் பொ.ஐ. முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்களசமரவீர குற்றம் சாட்டியுள்ளார்.

இக் கூட்டுத்தாபனம் சனாதிபதியைக் கடுமையாக விமர்சித்துள்ளதாகவும், அதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்போவதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனை வர்ணனை செய்து நிகழ்ச்சிகளை வெளியிடும் இக்கூட்டுத்தாபனம் சனாதிபதியைக் கடுமையாக விமர்சனம் செய்தது அநீதியென அவர் மேலும் விசனம் தெரிவித்துள்ளார்.

01 - 08 - 2003 தொடக்கம் 08 - 08 - 2003 வரை

ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்க கொடிவாரம்

(சி-8451) ஊனமுற்ற அங்கத்தவர்களை நாம் சமுதாய ரீதியாக மதித்த மாண்புடனும், கௌரவத்துடனும் வாழ வழி அமைப்போமாக.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 03ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.